விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசி 20 புதன்கிழமை (05.11.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 322

SATS-TECH ENGINEERS

NEW PACKAGES & RENEWAL
CALL :- 222 5908/222 8812

## இந்திய மத்திய அரசாங்கத்தை கண்டித்து தமிழ்நாட்டில் ஒரு வாரம் உண்ணாவிரதம்

### ம.தி.மு.க. அறிவிப்பு

(சென்னை)

இலங்கை அரசுக்கு உதவும் இந்திய மத்திய அரசினைக் கண்டித்து ஒரு வாரம் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தவுள்ளதாக வை.கோவின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஈழத் தமிழர்களைப் படுகொலை செய்து வரும் சிங்கள அரசுக்கு ராடர், இராணுவம் உட்பட அனைத்து உதவிகளையும் செய்து வரும் மத்திய அரசைக் கண்டித்து ம.தி.மு.க. சார்பில் எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை கண்டன வாரம் கடைப்பிடிக்கப்படும்.

அதன்படி 12 ஆம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அதிபர் சேவை நேர்முகத் தேர்வை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு

### கொழும்பு செல்லத் தேவையில்லை

(கொழும்பு)


இலங்கை அதிபர் சேவை தரம் 2-II ற்கு இணைத்துக் கொள்வதற்கு யாழ்.மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டு சான்றிதழ்களைப் பரிசீலிப்பதற்காக அழைக்கப்பட்டவர்கள் கொழும்புக்கு வரத் தேவையில்லை எனக் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் கே.முகமெட்தம்பி வலம்புரிக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பில் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவித்ததாவது,

நாளை மறுதினம் 7 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டும் என யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த்வர்களுக்குக் கல்வி அமைச்சினால் அறிவிக்கப் (12 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் பிரச்சினையைத் தீர்க்காமல் புலிகளைத் தோற்கடிக்க முடியாது

## மங்கள சமரவீர வலியுறுத்தல்



(கொழும்பு)

தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு உறுதியான தீர்வு காணப்படாத வரை விடுதலைப்புலிகளைத் தோற்கடிக்க முடியாது என முன்னாள் அமைச்சரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் அமைப்பாளருமான மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## மெழுகுதிரி வெளிச்சத்தில் இயங்கும் முல்லைத்தீவு வைத்தியசாலைகள்

(முல்லைத்தீவு)

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக முல்லைத்தீவு வைத்தியசாலைகள் மெழுகுதிரி வெளிச்சத்தில் இயங்குவதாக முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் கடும் சண்டைகள் நடைபெற்று வருகின்ற வன்னிப் பிரதேசத்தில் யுத்த சூழலில் சிக்கியுள்ள மக்களுக்குரிய அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்ற போதிலும் அப் பிரதேசத்தில் உள்ள வைத்தியசாலைகளுக்கு உரிய மருந்துப் பொருள்கள், எரிபொருள் என்பன போதியளவில் இன்னும் சென்றடையவில்லை என கூறப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வவுனியாவிலிருந்து 2 லொறி (12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.இளைஞர்கள் இருவர் புத்தளத்தில் கடத்தல்

(புத்தளம்)

புத்தளம் நூர் வீதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து நேற்று இரண்டு தமிழ்இளைஞர்கள் வெள்ளை வானில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம்நேற்றுமுற்பகல்11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.இவர்கள் இருவரும் யாழ்ப்பாணம், மானிப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்த சண்முகம் நிமலேந்திரன் மற்றும் சுப்பிரமணியம் சசிகரன் எனப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.புத்தளத்தில் தொடர்ந்தும் பல தமிழ் இளை ஞர்கள் கடத்திச் செல்லப்படும் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

## வரவு-செலவுத் திட்டத்திற்கு பின்னர் அமைச்சரவையில் திடீர் மாற்றம்

### பசில், முரளிதரன் அமைச்சர்களாகும் சாத்தியம்?

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் 2009 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அமைச்சரவையில் திடீர் மாற்றங்கள் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஒரு வருட காலப் பகுதிக்குள் ஒதுக்கப்பட்ட நிதிக்கு மேலதிகமான செலவுகளை மேற்கொண்ட அமைச்சுக்கள் மற்றும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முறையாக முன்னெடுக்காத அமைச்சுக்களிலேயே மாற்றங்கள் மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 5ற்கும் மேற்பட்ட அமைச்சுக்களில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்ற அதேவேளை வெளிவிவகார அமைச்சும் கைமாறுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் தெரிய வருகின்றது.

2007 ஆம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்துக்கு மாற்றாக ஐக்கிய தேசியக் கட்சியின் வரவு – செலவுத் திட்டம்

(கொழும்பு)

அரசாங்கத்தால் முன்வைக்கப்படவிருக்கும் வரவு-செலவுத் திட்டத்துக்கு மாற்றாக ஐக்கிய தேசியக் கட்சி மாற்று வரவு-செலவுத் திட்டமொன்றை வெளியிட்டுள்ளது.

இந்த மாற்று வரவு- செலவுத்திட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நேற்று செவ்வாய்கிழமை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாற்று வரவு-செலவுத்திட்டத்துக்கமைய, பாதுகாப்புப் படையினரின் மாதந்தச்சம்பளம் 40 ஆயிரம் ரூபாயாகவும், பொலிஸாரின் சம்பளம் 32 ஆயிரம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் இரகசிய ஒப்பந்தம் எதுவும் இல்லை

### வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவுடன் எந்தவித இரகசிய ஒப்பந்தமும் செய்யப்படவில்லை என வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேராவினால் நேற்று நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பயங்கரவாதத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளை நிறுத்துமாறு எந்த சக்திகளும் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கவில்லை.

அரசாங்கம் முன்னெடுத்து வரும் பயங்கரவாதத்திற்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

# இளம்வயதுக் கர்ப்பத்தின் தாக்கங்களும் அதனைத் தவிர்த்தலும்

இளவயதுக் கர்ப்பம் என்று குறிப்பிடப்படும் 19 வயதிற்குட்பட்ட கர்ப்பங்கள் யாழ் மாவட்டத்தில் பல்வேறுபட்ட இடங்களில் குறிப்பாக காரைநகர், மானிப்பாய், தெல்லிப்பழை, கோப்பாய் போன்ற சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவுகளில் மிகவும் அதிகளவில் அவதானிக்கப்பட்டுள்ளது. பல வருடங்களாக இதனால் 19 வயதிற்குட்பட்ட தாயிலும், பிறக்கும் குழந்தையிலும் ஏற்படும் கவலைக்கிடமான பாதிப்புக்களினால் தொடர்ந்து அக்குடும்பங்கள் சீரழிவுக்குட்படுகின்றன.

19வயதிற்குட்பட்ட தாயின் கர்ப்பப்பை, பிறப்புவழி, அவரது மனோநிலை என்பவை ஒரு புதிய குழந்தையை பெற்று அதனைப் பேணி வளர்க்கும் நிலையிலிருக்காது. மட்டுமல்லாது தாயில் கர்ப்பகாலத்தின் போது ஏற்படும் உயர் குருதியமுக்கம், குருதிச் சோகை (Anaemia) திடீர் குருதிப்பெருக்கு, கர்ப்பத்தில் குழந்தை இறத்தல், பிறப்பு நேரத்தில் ஏற்படக் கூடிய தடங்கல்கள் (Prolonged or Obstructed Labour), தாய் மரணம் என்பன மிகவும் அதிகமாக இவ் இளம் தாய்மாரைப் பாதிக்கும் என விஞ்ஞான ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

அவர்களுக்குப் பிறக்கும் குழந்தையானது, பிறப்பு நிறைக்குறைவு (Low birth weight) கர்ப்பகால வளர்ச்சிக்குறைவு (Intra uterine gorwth retardation), முனைப் பாதிப்புற்ற அல்லது அங்கவீனமுள்ள குழந்தை (Eg:- Cerebral palsy, இதயக்குறைபாடு), தாய்ப்பாலூடல் சிக்கல்கள் போன்றவற்றினால் பாதிக்கப்படலாம். மேலும் குழந்தை வதைக்கும் உட்படுத்தப்படலாம். (Child abuse)

இளம் வயதுக் கர்ப்பங்கள் பின்வரும் காரணங்களால் ஏற்படலாம்.

❖ இளம்வயதில் பாடசாலையில் இருந்து விலகி வேறு வேலையின்றி இருக்கும் ஆண்கள், பெண்கள்.

❖ அதிக சனநெருக்கமுள்ள இடங்களில் உதாரணமாக இடம்பெயர்ந்த முகாம்களில் வசிப்போர்,

❖ அரசியல் அல்லது பொருளாதார இலாபங்களை கருத்தில் கொண்டு பெற்றோரின் அறிவுக்குறைவினால் வலுக்கட்டாயமாக செய்துவைக்கப்படும் திருமணங்கள்.

❖ போர்ச் சூழலில் பாதுகாப்பற்ற நேரங்களிலும், இடங்களிலும் பயமின்றி பெண்கள் நடமாடுதல்.

❖ ஆண் துணையற்ற வீடுகளில் இருக்கும் இளம்பெண்களை குறிவைத்து அவர்களுக்கு பொருளாதார, சீர் உதவி செய்வது போல் நுழைந்து வல்லுறவுக்கு உட்படுத்தல்.

நம் நாட்டின் பல இடங்களிலுள்ள பல்கலைக் கழகங்களும் இளம் வயது கர்ப்பங்களுக்கும் சட்டவிரோத கருக்கலைப்புக்களுக்கும் விதிவிலக்கல்ல.

இதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் பெண்கள் கர்ப்பகால கவனிப்பின்றி சமுதாயத்துக்கு பயந்து மறைத்து வைக்கப்படுவதால், தாயின் உடல் நிலையும் வளரும் கர்ப்பமும் பாதிக்கப்படுகின்றது.

சட்டவிரோத கருக்கலைப்புக்களால் தாய் மரணமடையும் சூழ்நிலை ஏற்படுகிறது.

பிறந்த தேவையற்ற குழந்தையை வயல் வெளியிலும், குப்பையிலும், கதறவிட்டுச் செல்லுதல் அல்லது கிணற்றில் வீசிச் செல்லுதல் போன்றவை அதிகமாகி வருகின்றமையை தற்போதுள்ள யாழ்.மாதாந்தத் தரவுகள் காட்டுகின்றன.

இவற்றைக் கட்டுப்படுத்த பின்வரும் நடவடிக்கைகள் அவசியம்.

❖ இளம் வயதுக் கர்ப்பத்தின் பிரச்சினைகளை தரம் 9க்கு மேற்பட்ட மாணவர் யாவரும் அறிந்து கொள்ள வலயக் கல்வி அதிகாரிகள் சுகாதார ஊழியர்களுடன் ஒத்துழைக்க வேண்டும்.

❖ இடம்பெயர்ந்தோர் முகாம்களில் பெற்றோர் பிள்ளைகளுக்கு இதனைப் பற்றிய ஓர் விழிப்புணர்வு ஏற்கனவே வழங்கப்பட்டிருப்பினும் தொடர் கண்காணிப்பு செயற்பாடுகளும் அவசியம்.

❖ ஏற்கனவே இளம் வயதில் திருமணமான ஒரு பெண்ணிற்கு இருபது வயது தொடங்கும்வரை குடும்பத் திட்டமிடலை குடும்ப சுகாதாரமாதின் (Public Health Midwife) ஆலோசனைப்படி கைக்கொள்ள வேண்டும்.

❖ பாதுகாப்பற்ற இடங்களில் தேவையற்று பெண்கள் தனியே உலாவுவது தடுக்கப்படவேண்டும்.

❖ யாராவது வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருப்பின் அவர்கள் மிக விரைவாக 48-72 மணித்தியாலத்துக்குள் தமது அல்லது வேறு சுகாதாரப் பிரிவு குடும்ப சுகாதாரமாது (Public Health Midwife), பொதுச் சுகாதாரப் பரிசோதகர் (Public Health Inspector), பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி (Medical Officer Of Health), அல்லது பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தாய்சேய் நலப் பிரிவை (RDHS Office, MOMCH Unit) உடனடியாக நாடுங்கள்.

இதனால் ஏற்படும் கர்ப்பத்தை தடுக்க தேவையான விசேட கர்ப்பத்தடை மாத்திரை மேற்குறிப்பிட்டவர்களிடம் இலவசமாய்ப் பெற்றுக் கொள்ளலாம்.

இவர்கள் இது சம்பந்தமான உங்கள் இரகசியங்களை பேணுவார்கள் என உறுதியளிக்கிறோம்.

இதேவேளை தவறான பாலியல் நடத்தைகளுக்கு துணையாக இதனை அடிக்கடி பாவித்தல் உடல் நிலைக்கு கேடு விளைவிக்கும் என்பதையும் கருத்தில் கொள்ளல் நன்று.

**வைத்திய கலாநிதி ஜோ.தி.சிவசங்கர்**
**தாய்சேய் நலப்பரிவு**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்.**

பின்வரும் தொலைபேசி எண்களில் அவசர அழைப்புக்களை ஏற்படுத்தி உங்களுக்குத் தேவையான உதவிகளையும், மற்றும் மருத்துவ ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.

| | |
|---|---|
| RDHS Office (MOMCH Unit) | -021-222 3662 |
| MOH யாழ்ப்பாணம் | -021-222 2645 |
| MOH ஊர்காவற்றுறை | -060-221 3588 |
| MOH பருத்தித்துறை | -021-226 4482 |
| MOH கோப்பாய் | -060-221 3615 |
| MOH மானிப்பாய் | -060-221 3614 |
| MOH சாவகச்சேரி | -060-221 3621 |
| MOH தெல்லிப்பழை | -060-221 3620 |



# வேலணை பிரதேச சபையால் மூத்த பத்திரிகையாளர் இருவர் இன்று கௌரவிக்கப்படுகின்றனர்



என்.இராமச்சந்திரா



இ.சற்குருநாதன்

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார இறுதிநாள்நிகழ்வு இன்று நடைபெறும்போது தீவகத்தின் மூத்த பத்திரிகையாளர்கள் இருவர் 'கலைச்சுடர்' பட்டம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

வீரகேசரிப் பத்திரிகையாளர் என்.இராமச்சந்திரா (மண்டைதீவு) தினகரன் பத்திரிகையாளர் இ.சற்குருநாதன் (வேலணை) ஆகிய இருவருமே இன்றைய தினம் கௌரவிக்கப்படும் பத்திரிகையாளர் ஆவர்.

கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக வீரகேசரிப் பத்திரிகையின் வேலணைச் செய்தியாளராக பணியாற்றும் என்.இராமச்சந்திரா யாழ்.குடாநாட்டுச் செய்திகளையும் செவ்விகளையும் வீரகேசரிப் பத்திரிகை மூலம் வெளிப்படுத்தியதுடன் சமய, சமூகப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்தியவர்.

தினகரன் பத்திரிகையின் வேலணைச் செய்தியாளராக 40 வருடங்களாகப் பணியாற்றி வரும் இ.சற்குருநாதன் உலகத் தமிழர் பண்பாட்டு அமைப்பின் உறுப்பினராக இருப்பதுடன் தமிழகத்தில் பத்திரிகைத்துறை பயிற்சியையும் பெற்றுக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

# அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு செல்வதற்கு வன்னி மக்கள் அச்சம்

(கொழும்பு)

வன்னியில் விடுவிக்கப்படாத பகுதியிலுள்ள மக்கள் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிக்கு செல்வதற்கு அச்சமடைவதாக மனித உரிமைகள் அமைப்பான, மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கப் படைகள் மற்றும் ஆயுதக் குழுவினரால் மேற்கொள்ளப்படும் கடத்தல்கள், படுகொலைகள் போன்றவற்றுக்கு அஞ்சி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து மக்கள் வெளியேறப் பின்னடிப்பதாக மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கத்தைச் சேர்ந்த ராஜன் கூல் தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு தெரிவுசெய்யும் உரிமை வழங்கப்படவில்லை, பொதுமக்கள் தமது பகுதிகளிலிருந்து வெளியேறுவதை விடுதலைப் புலிகள் விரும்பவில்லை.

அதேநேரம், அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் தமது எதிர்காலம் எவ்வாறு இருக்கும் என்ற ஏக்கமும் அவர்களுக்கு உள்ளது. கொழும்பு ஊடகமொன்றுக்கு மின்னஞ்சல் மூலம் வழங்கிய செவ்வியில் கூல் கூறியுள்ளார். (ச-5)

# லெமன் பவ் பிஸ்கட் விற்பனைக்கு சுகாதார அமைச்சு அனுமதி

(யாழ்ப்பாணம்)

மஞ்சி லெமன் பவ் பிஸ்கட் விற்பனைக்கு சுகாதார அமைச்சு அனுமதித்துள்ளதாக யாழ். பிராந்திய சுகாதாரப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

மெலமைன் நஞ்சுப் பதார்த்தம் கலந்து இருப்பதாக சந்தேகிக்கப்படும் உணவுப் பொருட்கள் மீதான தடைதொடர்பாக சுகாதார அமைச்சினால் 16.10.2008 இல் ஓர் சுற்றறிக்கை வெளியிடப்பட்டு இருந்தது. அதன் பிரகாரம் இலங்கையில் பல உணவுப் பொருட்களின் விற்பனையும், பாவனையும் தடை செய்யப்பட்டு இருந்தது.

யாழ். மாவட்டத்தில் பொது சுகாதார பரிசோதகர்களின் உதவியுடன் அனைத்து உணவு விற்பனை நிலையங்களும் இப்பட்டியலில் உள்ள உணவுப் பொருட்களை இனம் காணும் நோக்குடன் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன.

இதன்படி யாழ்.மாவட்டத்தில் சில விற்பனை நிலையங்களில் இப்பட்டியலில் இருந்த மஞ்சி லெமன் பவ் பிஸ்கற் இனம் காணப்பட்டு அவற்றின் விற்பனை மறு அறிவித்தல் வரை தடைசெய்யப்பட்டிருந்தது.

கடந்த 3ஆம் திகதி அன்று மத்திய சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட பிந்திய சுற்றிக்கையின் பிரகாரம் மஞ்சி லெமன் பவ் பிஸ்கற் உணவு மாதிரி திருப்திகரமாக உள்ளதாக ஆய்வு முடிபுகள் கிடைக்கப் பெற்றுள்ளமையால் அதன் மீதான விற்பனை மற்றும் பாவனை தடை நீக்கப்பட்டுள்ளது.

எனவே தற்போது யாழ்மாவட்டத்தில் மெலமைன் கலக்கப்பட்டதாக சந்தேகிக்கப்பட்டு தடைசெய்யப்பட்ட உணவு வகைகள் ஏதும் விற்பனையில் இல்லை என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)

## தனிமையிலிருந்த பெண் கழுத்து நெரித்துக் கொலை

கோப்பாய் வடக்கில் நேற்று முன்தினம் இரவு வீட்டில் தனிமையில் இருந்த பெண் ஒருவரை கழுத்து நெரித்து கொலை செய்துவிட்டு கும்பல் ஒன்று நகை மற்றும் அங்கிருந்த பொருள்களை கொள்ளையிட்டுச் சென்றுள்ளது.

இச் சம்பவத்தில் சின்னத்தம்பி புவனேஸ்வரி (வயது 41) என்ற பெண்ணே கொல்லப்பட்டுள்ளார்.

குறித்த பெண் வீட்டில் தனிமையில் வசித்துவந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு அங்கு சென்ற இனந்தெரியாத கும்பல் ஒன்று கழுத்து நெரித்து கொலை செய்துவிட்டு பிரஸ்தாப பெண் அணிந்திருந்த நகைகள் மற்றும் அலுமாரியிலிருந்த பொருள்களையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக விசாரணைகளில் கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.நீதிவான் ஆர்.வசந்தசேனன் பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு கோப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

**மணமகன், மணமகள் தேவை**

வெளிநாட்டு இஞ்சினியர், டாக்டர், சாதாரண வேலை செய்பவர்கள், P.R உள்ள மணமக்கள் உள்ளனர். உள்நாட்டில் டாக்டர், இஞ்சினியர், ஆசிரியர்கள் போதிய அளவு உள்ளனர்.

தொடர்புகளுக்கு:- ஈசன் திருமண சேவை, வட்டு. வடக்கு, வட்டுக்கோட்டை, புளியடி சந்தி (சிந்துபுரம்).
தொ.பே. இல.:- 077 9297343

மேரி திருமண சேவை
இல.46 புதுவீதி, கொய்யாத் தோட்டம்.
தொ.பே. இல.:- 077 9116346
(1884)

# இன்று ஒரு தகவல்

## "ஹலோ!"(Hello!)

"ஹலோ ! எப்படி இருக்கிறீங்க?" என்று கேட்டார் ஒருவர்.

" நேரில் தானே விசாரிக்கிறீங்க... ரெலிபோனில் கூப்பிடுவது மாதிரி ஏன் " ஹலோ!" என்று சொல்கிறீர்கள்..." என்றார் அவர்.

"என்ன பண்றது? பழகிப் போய் விட்டது!" என்றார் இவர்.

இந்த ஹலோ என்ற வார்த்தை இன்று உலகம் முழுவதும் உபயோகத்தில் உள்ளது.

தொலை பேசியைக் கையிலெடுத்தவுடன் வரும் முதல் வார்த்தை "ஹலோ! " தான்!

இந்தவார்த்தை எப்படி? எங்கே? ஆரம்பமாகியிருக்கும் என்று ஆராய்ச்சி செய்தார் நியுயோர்க் நகரப் பேராசிரியர் ஒருவர்.

கி.பி 1340 ஆம் ஆண்டிலேயே இந்த சொல் வழக்கத்தில் இருந்ததாம். ஆனால் தொலை பேசி கண்டு பிடித்ததன் பின்னர்தான் இந்த அர்த்தத்தில் அந்த வார்த்தை உபயோகப்பட்டதாம்!

ஒரு காலத்தில் தொலை பேசி இணைப்பாளர்களாக பணியுரிந்து பெண்களை Hello Girls என்று அழைத்தார்களாம். 1876இல் அலெக்சாண்டர் கிரஹம்பெல் தொலை பேசியைக் கண்டு பிடித்தார். அவர் தனது கருவியைப் பயன்படுத்துபவர்கள் "அஹோய்" (Ahoy) என்று ஆரம்பித்து அதற்குப் பின் பேச ஆரம்பிக்கலாம். என்று சொன்னாராம்.

அதன் பின்னர் ஒரு வருடம் கழித்து 1877இல் அமெரிக்காவின் "கனெக்டிகட்" நகரத்தில் முதலாவது தொலை பேசி இணைப்பகம் திறக்கப்பட்டது. அப்பொழுது மின்சாரத்தைக் கண்டு பிடித்த தோமஸ் அல்வா எடிசன் தனது நண்பருக்கு எழுதிய கடிதத்தில் தொலை பேசி உரையாடலை தொடங்க" ஹலோ" என்ற சொல் தான் அழகாக இருக்கும் என்று எழுதினாராம்.

அதன் பின்னர் நியூ ஹெவன் என்ற இடத்தில் இன்னொரு நிலையம் திறக்கப்பட்டது. அப்பொழுது பல பேர் "ஹலோ" என்று அழைத்தனர். சிலர் "அஹோய்" என்று அழைத்தார்களாம்.

கொஞ்ச காலத்தில்" அஹோய்" என்ற வார்த்தை மறைந்து விட்டது.

" அஹோய் வாரும் பிள்ளாய் " என்ற சொற்றொடர் பழைய தமிழ் உரை நடை நுல்களிலும் உண்டு.

முதன் முதலில் தொலை பேசி நிலையம் திறந்த போது தொலை பேசி இணைப்பாளர்கள் உரையாடும் முறை குறித்து ஒரு கையேடு வெளியிட்டார்களாம்.

அதில் பேச்சை ஆரம்பிக்கும் போது உங்களுக்கு என்ன வேண்டும்?-(What is wanted) என்று தொடங்கலாம். என்பது அவர்களது யோசனை.

ஆனால் அதுவும் அவ்வளவு காலம் நீடிக்கவில்லை.

கடைசியில் "ஹலோ" தான் எங்கும் உபயோகப்படலாயிற்று.

1883ஆம் ஆண்டில்தான் முதல் தடவையாக தொலைபேசியில் " ஹலோ" என்ற வார்த்தை ஒலித் தது. என்று ஒக்ஸ்போர்ட் ஆங்கிலப் பேரகராதி சொல்கிறது.

ஆனாலும் அதற்கு முன்பே,

1880இலேயே நாவலாசிரியர் மார்க் ட்வைன் இதைப் பயன்படுத்தியிருக்கிறாராம். இந்த விபரத்தை புரூக்ளின் கல்லூரிப் பேராசிரியர் ஆலன் கோனிஸ்பேர்க் என்பவர் அமெரிக்க தந்தி- தொலை பேசி நிறுவனத்தின் ஆவணங்களை ஐந்தாண்டு காலமாக ஆராய்ச்சி செய்து கூறியிருக்கிறார்.

தொலை பேசி என்பது எவ்வளவு பெரிய கண்டு பிடிப்பு! ஆனால் தொலை பேசி மூலம் ஆட்களை பிடிக்கிறது தான் இந்தக் காலத்தில் கஷ்டம்.

ஒரு வீட்டுக்குப் போன்வந்தது. ஒரு சின்னப் பையன் ஓடிப் போய் எடுத்தான்.

போன் பண்ணியவர் " தம்பி... அப்பா வீட்டில் இருக்கிறாரா?" என்று கேட்டார்.

"கொஞ்சம் லைனிலேயே இருங்க... அவர் வீட்டில் இருக்கிறாரா இல்லையா என்பதை அவரிடமே கேட்டுச் சொல்கிறேன்" என்றான் அவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நாட்டைக் காட்டிக் கொடுத்த தலைவர்கள் பட்டியலில் மஹிந்தவின் பெயர் இடம் பெறுவதை தவிர்க்க முடியாது

## சந்திரலோக தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டைக் காட்டிக் கொடுத்த அரசியல் தலைவர்கள் பட்டியலில் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரர் பசில் ராஜ பக்ஷ ஆகியோரின் பெயர்கள் இடம் பெறுவதனை தவிர்க்க முடியாதென தேசிய பிக்கு முன்னணியின் அமைப்பாளர் சந்திர லோக தேரர் தெரிவித்துள்ளார். இந்திய தலையீட்டுக்கு எதிராக மனித வேலியொன்றை அமைப்போம் என்ற தலைப்பில் நடை பெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் முக்கிய பொருளாதார மையங்களை இந்தியாவிற்கு தாரை வார்க்கும் நடவடிக்கை 2005 ஆண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்திலேயே தொடங்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்பாடல் தேசிய பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள பின்னணியில் எயர்டெல் என்ற இந்திய தொலை தொடர்பு நிறுவனத்திற்கு மஹிந்த அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலிப் பயங்கரவாத்தை இல்லா தொழிப்பதற்காக யுத்தம் முன்னெடுக்கப்படுவதாக மஹிந்த ராஜபக்ஷ கூறிய போதிலும் இந்த நாட்டின் சிங்கள ,முஸ்லிம் மற்றும் தமிழ் மக்களை காட்டிக் கொடுக்கும் செயற்பாட்டிலேயே அவர் முனைப்பு காட்டி வருவதாக சந்திலோக தேரர் தெரிவித்துள்ளார்.

இந்த அனர்த்த நிலையை தெளிவாக புரிந்து கொள்ளா விட்டால் எதிர்காலத்தில் இலங்கை இந்தியாவின் ஓர் மாநிலமாக மாறக் கூடிய அபாயம் நிலவுவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஜனாதிபதியின் சதோரர் இந்தியாவிற்கு மேற்கொண்ட விஜயம் உத்தியோக பூர்வ விஜயத்தைத் தா ண்டி இரகசிய ராஜதந்திர விஜய மாகவே காணப்படுகின்றதென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ)

# வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம் நடாத்திய வணிகப் போட்டி முடிவுகள்

(வடமராட்சி)

வடமராட்சி கல்விவலயம் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட வலய மட்ட வணிகப் போட்டி முடிவுகள் வடமராட்சி வலயக்கல்வி பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு.

*தரம்-13*

**வணிகக் கல்வியும் கணக்கீடும்**

ஆர் .வருணன்-ஹாட்லிக் கல்லூரி இரண்டாமிடம் இருவர்- ரி.துஷ் யந்தன்-ஹாட்லிக்கல்லூரி, செ.சயந்தன்-விக்னேஸ்வராக் கல்லூரி

*தரம் 11*

**முயற்சியாண்மைக் கல்வி**

த.துவாரகன் -விக்னேஸ்வராக் கல்லூரி, ப.ஜெயரூபன்-உடுப்பிட்டிஅ.மி.கல்லூரி ,நால்வர் மூன்றாமிடம் ஈ.ரஞ்சினி-விக்னேஸ் வராக்கல்லூரி ,ப.மயூரி-வட ம.ம.கல்லூரி .செ.அனுதர்சா-வட ம.ம.கல்லூரி .இ.சோபனா-உடுப்பிட்டிமகளிர் கல்லூரி.

*தரம்-10*

**முயற்சியாண்மைக் கல்வி**

சி. துவாரகன்-நெல்லி யடிம.ம. வித்தி ,சோ.இராகுலன்-விக்னேஸ் வராக் கல்லூரி ,நே.ஆதித்தியா-நெல்லியடிம.ம.வி

*தரம்-10*

**வணிகக்கல்வியும் கணக்கீடும்.**

கே.சுதர்சன்-ஹாட்லிக்கல்லூரி , வை. தபித்தா-மெதடிஸ்த பெ.உ.பாடசாலை,மூன்றாமிடம் மூவர் -ம. கௌசிகா-வட இந்து மகளிர் கல்லூரி , உ.சோபிதா-பொலிகண்டி இ.த.க.பாடசாலை , வி. பிரியா-நெல்லியடி ம.ம.வித்தி

# பாராட்டு விழாவும் பரிசளிப்பு வைபவமும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் கல்விகற்று தரம் 5புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பாராட்டும் பரிசளிப்புவைபவமும். இன்று புதன்கிழமை காலை 9மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் அ.சா.அரியகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் விருந்தினர்களாக பங்கு பற்றவுள்ள பருத்தித்துறை ஸ்ரீராம கிருஷ்ணா சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபாந்தா , பருத்தித்துறைமெதடிஸ்த திருச்சபை அருட்திரு. என்.அருள் நாதன் ,பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய பழைய மாணவர்சங்க தலைவர் ந.குண சீலன் ஆகியோர் மா ணவர்களைப் பாரா ட்டிபரிசில்களை வழங்குவர்

(ஓ-2)

# இராசி பலன்

*05.11.2008*
*(ஐப்பசி 20, புதன்கிழமை)*
*உத்தராடம் முற்பகல் 11.05மணிவரை*
*ஸப்தமி பிற்பகல் 5.17மணிவரை*
*இராகுகாலம் 12.05 -1.35மணிவரை*
*சுபநேரம் 4.35-6.05 மணிவரை*

| | |
|---|---|
| மேடம் | காரிய நன்மை, சுப நிகழ்வு, தூர தேசச் செய்தி, அதிக பிரயாசை. |
| இடபம் | உடல் உழைப்பு, அச்சமான நிலை, புதிய திட்டமிடல், ஆன்றோர் மதிப்பு. |
| மிதுனம் | வீண் பகை, ஆரோக்கியக் குறைவு, போசனசுகம், முயற்சி தடங்கல். |
| கடகம் | அபூர்வ சந்திப்பு, தெய்வ தரிசனம், கலந்துரையாடல், காரிய அனுகூலம். |
| சிங்கம் | திடீர் பயணம்.பணவருவாய்.சுக வாழ்வு உறவினர் சந்திப்பு. |
| கன்னி | முயற்சி தாமதம், குடும்பக் கவலை, மரியாதைக் குறைவு, வீண்செலவு |
| துலாம் | கல்வியில் ஆர்வம், தன்னம்பிக்கைக்குறைவு, காரிய தாமதம், ரோக நிலை. |
| விருச்சிகம் | அன்னியர் சந்திப்பு, தெய்வ தரிசனம், வாக்கு மேன்மை, பொருள் சேர்க்கை. |
| தனுசு | தொழில் மந்த நிலை, பணக்குறைவு,முயற்சி தாமதம், மரியாதைக் குறைவு. |
| மகரம் | சயன சுகம், ஆழ்ந்த சிந்தை, பெரியோர் சந்திப்பு, தெய்வ தரிசனம். |
| கும்பம் | பிதா சிந்தை, பண விரயம், திடீர் பயணம், கோபப்படுதல். |
| மீனம் | தொழில் நன்மை, தெய்வ தரிசனம், மனமகிழ்ச்சி, காரிய நன்மை. |

வளவன்

# குறைகேள் அரங்கு



## வேலைவாய்ப்பு தருவார்களா வடமாகாண சபை அதிகாரிகள்?

வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் வடமாகாண பிரதேச சபைகளிலுள்ள.வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பதாரிகளிடம் எதிர்பார்த்த அதிகபட்சமான க.பொ.த.(உ/த)சித்தியடைந்தும் , க.பொ.த.(சா/த)அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்திருந்தும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத எங்களில் பலர் நேர்முகப் பரீட்சையை எதிர்கொண்டு நம்பிக்கையுடன் காத்திருந்தவேளை , அதற்கு மேலதிகதகைமையுள்ள பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்களுக்கே பெரும்பாலும் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. 700 இற்கும் மேற்பட்டோர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தும் சுமார் 350க்கும் குறைவானோருக்கே சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இதன்பின்னர் பல்கலைக்கழகக் கல்வியை முடித்து வெளியேறிய பட்டதாரிகள் பலர் ஆசிரிய நியமனங்களை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நிலையில் நிலவப் போகும் வெற்றிடங்களையாவது நிரப்பமாட்டார்களா? என்று எங்களில் பலர் இன்னமும் நம்பிக்கையோடு காத்திருக்கிறோம்.

இதுபற்றி அப்போதே ''வலம்புரி '' ஆசிரியர் தலையங்கத்தில் கேள்வி எழுப்பப்பட்டதையும் ஞாபகத்திற்குக் கொண்டு வருகிறோம்.

மேற்படி நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டு தகுதியுடன் காத்திருக்கும் எங்களை இனிமேலாவது உள்வாங்குவீர்களா? அதிகாரிகளே இதற்கான பதிலை எங்களுக்கு அறியத் தருவீர்களா?

*பாதிக்கப்பட்டவர்கள்-*

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை சென்மேரிஸ் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது கீழ்வருவோர் புதுவருட நிர்வாகிகளாக தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவராக எம்.மரியாம்பிள்ளையும், உபதலைவராக எம்.ஜேசுதாசனும், செயலாளராக எம்.நொலஸ்கோவும், உபசெயலாளராக பி.ஜோன்சனும், பொருளாளராக என்.யுகேந்திரனும், விளையாட்டுக் கழகத் தலைவராக எம்.பௌலீசும் தெரிவுசெய்யப்பட்டனர்.

13பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (ஓ-134)

## நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு கல்லூரி அதிபர் ஆறு திருமுருகன் தலைமையில் ஒறேற்றர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், திருமதி கௌரி சண்முகலிங்கன் ஆகியோரும் ஓய்வுபெற்ற பொறியியலாளரான கலாநிதி எஸ்.கனகசபை, வைத்திய கலாநிதி சிவபாதநாயகி கனகசபை ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஓ-134)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலய நிறுவுநர் தினமும், பரிசளிப்பு விழாவும் நாளை மறு தினமும் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வணிகபீடாதிபதி க.தேவராஜா கலந்துகொள்ளவுள்ளார்.

தொடர்ந்து வாழ்த்துரையை உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதனும், நிறுவுனர் நினைப்பேருரையை வலிகாமம் கல்வி வலய விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர் பொ.நாகரட்ணமும் நிகழ்த்தவுள்ளார்கள்.

பரிசில்களை திருமதி இ.தேவராஜா வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (ஓ-2)

## யு.என்.டி.பி உதவியுடன் தும்புத் தொழிற்சாலை

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் விவேகானந்தா சனசமூக நிலையத்தின் வேண்டுதலின் பேரில் படித்துவிட்டு வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு சுயதொழில் வசதியை ஊக்குவிக்கும் முகமாக ஆவரங்கால் மேற்கில் தும்புத்தொழிற்சாலை ஒன்றை அமைக்க யு.என்.டி.பி.நிறுவனம் ரூபாய் 20 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

இவ் உதவியுடன் கட்டட வேலைகள் பூர்த்தியானதும் தெரிவுசெய்யப்பட்ட 30 பயனாளிகள் நன்மையடையவுள்ளனர். (ஓ-134)

# திருமறைக் கலாமன்றத்தின் இலக்கிய அவை நடத்தும் விவாதத் தமிழ் - 2008

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் இலக்கிய அவையின் ஏற்பாட்டில் நடைபெறும் " விவாதத் தமிழ் -2008 "என்னும் தமிழ்ப் பெருவிழா எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிமுதல் 286 , பிரதான வீதி , யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் சிறப்பாக இடம்பெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை திருமறைக் கலாமன்றத்தின் இலக்கிய அவை மேற்கொண்டு வருகின்றது.

" விவாதத் தமிழ் -2008 " விழாவில் சிறப்பு நிகழ்ச்சிகளாக பாடசாலைகளுக்கிடையிலான விவாதப் போட்டிகளில் வெற்றி பெறும் அணியின் விவாத அரங்கு இலக்கிய அவையின் விவாத அரங்கு மற்றும் கவியரங்கம் " தமிழ்-இன்றும் நாளையும் " என்ற தலைப்பிலான சிறப்புரை , பரிசளிப்புக்கள் போன்றவை இடம்பெறவுள்ளன.

இவ் விழாவினை முன்னிட்டு யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட விவாதப் போட்டிகள் ,விவாதப் பேச்சு மற்றும் கட்டுரை ,கவிதை ,இலக்கியத் திறனாய்வுப் போட்டிகள் நாளை வியாழனும் , நாளை மறுதினமும் வெள்ளியும் திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகம் , கலைக்கோட்டம் ஆகியவற்றில் காலை 8.30 மணிமுதல் நடைபெறவுள்ளன.

இப் போட்டிகளில் யாழ்.குடாநாட்டின் 50 வரையிலான பாடசாலைகளின் 500க்கும் அதிகமான மாணவர்கள் பங்கேற்கவுள்ளார்கள்.

இப் போட்டிகளுக்காக விண்ணப்பித்த பாடசாலை மாணவர்களை தங்களுக்கு பொறுப்பான ஆசிரியர்களுடன் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக குறிக்கப்பட்ட நாட்களில் , குறித்த நேரங்களுக்கு சமுகம் தந்து போட்டிகள் சிறப்பாக நடந்தேற ஒத்துழைப்பு வழங்குமாறு திருமறைக் கலாமன்ற இலக்கிய அவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். (ஓ)

## யாழ்.கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான இறுதிப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவையின் 10ஆம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற வலய மட்ட இறுதிப் போட்டியில் முதல் 3 இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் பெயர் விபரம் யாழ்.கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் க.குமாரசாமியினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

விபரம் வருமாறு,

**கரப்பந்து-ஆண்**

புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி, அச்சுவேலி மத்திய கல்லூரி, அத்தியார் இந்துக் கல்லூரி

**கரப்பந்து -பெண்**

அச்சுவேலி மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, கொக்குவில் இந்துக்கல்லூரி.

**கிரிக்கெற்**

யாழ்.மத்தியகல்லூரி, முத்துத் தம்பி மகா வித்தி., கொக்குவில் இந்துக்கல்லூரி.

**வலைப்பந்து**

கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர் மடம்.

**காற்பந்து**

சென்பற்றிக்ஸ் கல்லூரி, சென்ஜேம்ஸ் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி. (ஓ-2)

## தார் வந்து சேராததால் வீதிகள் செப்பனிடுவதில் தாமதம்

### மாநகர ஆணையாளர் கவலை

யாழ். மாவட்ட வீதிகளைச் செப்பனிடுவதற்குத் தேவையான அளவு தார் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படாமையால் யாழ். நகர வீதிகளைச் செப்பனிட முடியாதுள்ளது என யாழ் மாநகரஆணையாளர் மு. சரவணபவ கவலை தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில், அபிவிருத்திக்கு தேவையான தாரினைப் பெறுவதற்கு சம்பந்தப்பட்டவர்களுக்கு கோரிக்கை விடுத்திருப்பதாகவும் பெரும்பாலும் ஜனவரி மாதமளவில் தார் யாழ்ப்பாணம் வந்தடையலாம் எனவும் தார் வந்ததும் பழுதடைந்துள்ள வீதிகள் அனைத்தும் செப்பனிடும் வேலைகள் நடைபெறும் என்றும் தெரிவித்தார்.

தற்பொழுது தார் இல்லாததால் வீதி செப்பனிடும் வேலைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளதாகவும், செப்பனிடப்பட்ட வீதி களுக்குப் போதியளவு தாரிடாததால் வரும் மழை காலத்தில் மீண்டும் பழுதடையும் அபாயம் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ)

## பட்மின்டன் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான (16 வயதுக்குக் கீழும் 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான) பட்மின்ரன் போட்டிகள் எதிர்வரும் 7ஆம், 8ஆம் திகதிகளில் காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் 7 ஆம் திகதி ஆண்களுக்கும் 8ம் ஆம் திகதி பெண்களுக்கும் போட்டிகள் இடம்பெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் அறி வித்துள்ளார். (ஓ)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30மணிக்கு பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ-134)

## நுளம்பை கட்டுப்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

மழைக்காலத்தை முன்னிட்டு இன்று புதன்கிழமை வட்டு வடக்கு, வட்டு மேற்கு பகுதியில் உள்ள சனசமூக நிலையங்க ளுக்கு அருகாமையிலும் மூளாய் வீதி ஸ்ரீமுருகன் மில்லடியிலும் உக்கமுடியாத திண்மக்கழிவுப் பொருட்களை(பிளாஸ்ரிக் பொருட்கள், உடைந்த போத்தல்கள் மற்றும் தண்ணீர் தேங்கி நிற்கக் கூடிய பொருட்கள்) போன்றவற்றை வலி.மேற்கு பிரதேச சபையினரின் உதவியுடன் எடுத்துச் செல்லப்பட இருக்கின்றன.

எனவே அப் பகுதி மக்கள் தங்கள் வீட்டில் உள்ள மேற்படி கழிவுப் பொருட்களை இன்று காலை 11மணிக்கு முன் மேற்குறிப்பிட்ட இடங்களில் கொண்டு வந்து வைக்கும்படி சித்தன்கேணி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ரி.கிருபன் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ)




## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச்சங்க மாவட்டக் கிளையின் மகாநாட்டு மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு "தேடுதல்" விடயமான கருத்தரங்கொன்று நடைபெறவுள்ளதாக மாவட்டக் கிளையின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இக் கருத்தரங்கில் பிரிவுத் தலைவர்கள் . செயலாளர் ஆகியோரை கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஓ-134)

## வேலையற்ற பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல்

நியமனம் பெறவுள்ள 1ஆவது பட்டியலில் பெயர்வந்த பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு பெருமாள் கோவிலடியில் இடம்பெறவுள்ளதால் அனைவரும் தவறாது சமுகம்தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஓ)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி 8ஆம் அணி நடனத்துறை முகிழ்நிலை ஆசிரியர் செல்வி மதிவதனி நித்தியானந்தக் குருக்களால் தொகுத்து எழுதப்பட்ட "ஈழத்து நாட்டியக் கலைஞர்களின் புலர்வு -ஒரு மீள் பார்வை" என்ற நூலும், இசைத்துறை முகிழ்நிலை ஆசிரியர் செல்வி. செல்வதுளசினி நவரத்தினத்தினால் எழுத்தப்பட்ட " இசைமணி செல்வி சந்திரிக்கா கணேஸ்பரனின் இசைப்பணி" என்ற நூலும் இன்று புதன்கிழமை காலை 9மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் விரிவுரையாளர் திருமதி வி.நரேந்திரா தலைமையில் வெளியிடப்படவுள்ளது.

பிரதம விருந்தினராக பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் கலந்துசிறப்பிக்கவுள்ளார். (ஓ)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

யாழ் வலய பாடசாலை அதிபர்களுக்கு பரீட்சை மற்றும் தர உள்ளிட்ட கணக்குகள் தொடர்பான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ் வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

எனவே யாழ். வலயத்துக்குட்பட்ட அனைத்து அதிபர்களையும் 31.10.2008 வரையான தர உள்ளீட்டு கணக்கறிக்கைகளுடன் (QUALITY INPUT,HOP,JICA,SEMP) சமுகமளிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஓ-4)





அனலைதீவு கூட்டுறவுச் சங்கத்தின் கோப்சிற்றி திறப்புவிழா அண்மையில் கூட்டுறவுச் சங்கத் தலைவர் கிரிதரன் தலைமையில் இடம்பெற்றது.

இவ்விழாவில் யாழ்.மாவட்ட சமூகசேவை அமைச்சின் இணைப்பதிகாரி எஸ்.ஏ.உதயன், தீவக அமைப்பாளர் எம்.காந்தன், கூட்டுறவு உதவி ஆணையாளர் சிவலிங்கம், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் சிறிமோகன், கூட்டுறவு முகாமையாளர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிப்பதைப் படங்களில் காணலாம்.

# நோத்முதல் கோபல்லவா வரை 145



## டொனமூர் திருத்தம் பற்றிய விவாதம்

டொனமூர் சபையினர் கண்டியருடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. அத்தோடு சிறுபான்மையினருள் பிரதான இனத்தாராகிய தமிழரையும் திருப்திப் படுத்தவே அவர்கள் திரிசிங்களவுக்குப் பதிலாக மூன்று தலைநகரங்களிலும் அரசாங்க சபை வைகல்களை நடத்தி ஓரளவுக்கு ஐக்கியத்தை வளர்க்க வழி வகுத்தார்கள் எனலாம்.

டொனமூர் திருத்தம் இலங்கைக்கு உதவாதது என்று இலங்கையர் சட்ட சபையிலும், சபைக்கு வெளியிலும் தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்கள். அதன் பின்னரும் ஆள்பதி சேர்.ஹேர் பேட்ஸ்ரான்லி இலங்கையரின் மனநிலையை அறிந்து கொள்ளாமல் அத்திட்டத்தை எது விதத்திலும் இலங்கையருக்குத் திணித்து விடவே முயற்சி செய்தார்.

அவர் சட்டசபையின் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவரைத் தனித்தனி கண்டு அதனை ஏற்றுக்கொள்ளுமாறு நட்புரிமையிற் கேட்டார். அங்ஙனமே முன்னர் 1920 ஆம் ஆண்டிலேயும் ஆள்பதி மனிங் சட்டசபையினரிடம் ஆசை வார்த்தை கூறி ஆதரவு பெற்றார்.

ஆனால் இம்முறை ஆள்பதியின் முயற்சி பயனளிக்கவில்லை என்றே அவர் 2.6.1929 இல் குடியேற்ற மந்திரியாருக்கு முதலில் எழுதினார்.

### மீள் பார்வை

பெரியவர்கள் மறுப்புக்குப் பிரதான காரணம் சர்வசன வாக்குரிமையே எனப் பேசப்பட்டது. வளர்ந்து வரும் இந்தியத் தமிழரின் வாக்குரிமை கட்டுப்படுத்தப் படுவதனால் சிங்களப் பிரமுகர்கள் சர்வசன வாக்குரிமையோடு டொனமூர்த் திருத்தத்தை ஏற்றுக்கொள்வார்கள் என இடைக்காலத்தில் நிலைமை மாறலாயிற்று. எனவே அவர்கள் 1923 ஆம் ஆண்டில் இருந்த வருமானம், ஆதனம், கல்வியறிவு ஆகிய தகமைகள் இப்போதைக்கும் இருத்தல்வேண்டும் என்று கூறினார்.

ஆனால் குடியேற்ற மந்திரியார் எவர்களுடைய அபிப்பிராயத்துக்கும் செவிகொடாது, 10.10.1929 இல் டொனமூர் திருத்தம் சில சிறிய மாற்றங்களுடன் இலங்கையில் நடைமுறைக்கு எடுத்துக்கொள்ளப்படல் வேண்டும் என அறிவித்தார்.

அன்றி அதில் வேறெவ்விதமான மாற்றங்களும் செய்யக் கூடாதெனவும் நிர்வாக சபை முறை இருத்தல் வேண்டும் எனவும், ஆள்பதியின் மேலதிக சிறப்பதிகாரங்கள் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கும் முகமாக இருத்தல் வேண்டும் என்றும், அதில் அமைந்த அடிப்படை மாற்றங்களாய வகுப்புவாதப் பிரதிநிதித்துவ நீக்கம், சர்வசன வாக்குரிமை வழங்கல், சட்ட நிர்வாக சபையின் அதிகாரம் என்பன நிலவுதல் வேண்டும் என்றும் வற்புறுத்தினார்.

"*டொனமூர் யாப்பைக் குடியேற்ற மந்திரியார் செய்த திருத்தங்களோடு இலங்கையின் நன்மையின் பொருட்டு ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்*" என்னும் பிரேரணை குடியேற்றக் காரியதரிசியின் பெயரில் இருந்தது. அப் பிரேரணையை அவருக்காகப் பதிற் கடமையாற்றிய F.O. ரைறல் 6.12.1929 இல் பிரேரித்தார். அந்த நேரத்தில் H.A.P.சந்திரசேகரம் அவர்கள் அறிக்கைக்கு எதிராகவும், அதனை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கூறியவர்களைத் தாக்கியும் அருமையாகப் பேசினார்.

அப் பிரேரணை 12.12.1929 இல் வாக்களிப்புக்கு விடப்பட்டது. அதிலே டொனமூர் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும் என்று வாக்களித்த 19பேரும் பின்வருமாறு, அவர்கள் பெயர்களின் முன் கௌரவ திரு என்று கூட்டி வாசிக்கவும்.


டி.எச்.கொத்தலாவல, ஈ.ஆர்.தம்பிமுத்து, ஏ.சி.ஜி.விஜயகூன்.என்.ரி. மாட்டின், சி.ஈ. விக்ரர்கொறியா. சி.எச்.சற்.பர்ணாந்து, எச்.ஆர்.பிறீமன், டொன்.பாரன்.யயதிலக, ஜி.ஈ. மதவல, ஏ.எவ்.மொலமுரே, எவ்.ஏ.ஒபயசேகர. டி.எஸ்.சேனநாயக, வி.எஸ்.த. விக்கிரமநாயக்க, டபிள்யூ.ஏ.த.சில்வா, பி.வி.றம்புக்வெல, ரி.எல்.விலியஸ், எம்.ஜே.கேரி, ஜி.ஈர்.த.சில்வா, சி.இ.ஹேறவ்ஸ்

டொனமூர்த் திருத்தம் இலங்கை வாழ் மக்களுக்கு எவ்வாற்றானும் உதவாதது என எதிராக வாக்களித்தவர் பின்வரும் 17 பேராவர்.

என்.எச்.எம்.அப்துல்காதர், சேர்.பொன்னம்பலம் இராமநாதன், வைத்திலிங்கம் துரைசுவாமி, ஈ.டபிள்யூ. பெரேரா, சி.டபிள்யூ. டபிள்யூ.கன்னங்கரா, கே.பாலசிங்கம், ரி.பி. யயா, எச்.எம்.மாக்கான் மரக்கார், அருணாசலம் மகாதேவா, ஐ.எக்ஸ். பெரேரா, சு. இராசரத்தினம், எம்.எம்.சுப்பிரமணியம், ஜி.ஏ.எச். வில்லே, ரி.எம்.சபாரத்தினம், கே.நடேசஐயர், சி.ஈ. டி.வொஸ், எச்.ஏ.பி. சந்திரசேகரம்.

**க.சி.குலரத்தினம்**

டொனமூர் திருத்தம் இரண்டே இரண்டு மேலதிக வாக்குகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதற்குப் பாதகமாக இருந்த திரு.தம்பிமுத்து திடீரென மனம் மாறியோ மாற்றப்பட்டோ சாதகமாக வாக்களித்தார். (தொடரும்)



இலங்கை வங்கியின் காரைநகர் கிளை முகாமையாளர் அழ.பகீரதன் அண்மையில் மாற்றலாகிச் சென்றதையிட்டு சேவைநலன் பாராட்டு விழா நடைபெற்றது.

இந்நிகழ்வின் போது முகாமையாளர் அழ. பகீரதனிற்கு காரைநகர் உதவி அர அதிபர் இ.த.ஜெயசீலன் மற்றும் வட பிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் என்.சிவரட்ணம், புதிய முகாமையாளர் இ.சிவகுமாரன் ஆகியோர் பாராட்டுக் கேடயம் வழங்குவதனையும், விருந்தினர்களுடன் வங்கி உத்தியோகத்தர்கள் நிற்பதனையும் அடுத்துள்ள படத்தில் காணலாம்.

(படங்கள்: காரைநகர் செய்தியாளர்)

# இலங்கையில் நீதிமன்ற அமைப்பு 3



**1.8 விசேட சந்தர்ப்பங்களில் "WRIT" கட்டளைகளை வழங்குவதற்கான அதிகா ரங்கள்**

விசேட சந்தர்ப்பங்களில் "WRIT" கட்டளைகளை வழங்குவதற்கான அதிகாரங்கள் என்பது பாராளுமன்றத்தின் சட்டத்தின் பிரகாரம் ஸ்தாபிக்கப்படும் ஏதாவதொரு நிறுவனத்திற்கு, ஆணைக்குழுவிற்கு எதிராக சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக "WRIT" கட்டளை வழங்குதல்.

பிரதம நீதியரசர் உட்பட 11 நீதியரசர்கள் அடங்கிய உயர்நீதிமன்றம் கொழும்பில் மாத்திரம் கூட்டங்களை நடாத்துகின்றது.

**2. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் மேன்முறையீட்டு நீதிமன்றம்** (Court of Appeal)

இலங்கையில் செயற்படும் இரண்டாவது உயர்ந்த நீதிமன்றம் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகும். மேன்முறையீட்டு நீதி மன்றத்திற்கு உரித்தான அதிகாரங்கள் 1978 ஆம் அரசியலமைப்பின் 138 தொடக்கம் 145 வரையிலான விதிகளில் குறிப்பிடப்பட் டுள்ளது.

இந்த விதிகளின் பிரகாரம் கீழ்க் குறிப்பிடப்படும் அதிகாரங்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு உரித்தானவையாகும்.

2.1 மேன்முறையீட்டு நீதிமன்ற அதிகாரங்கள்.

2.2 திருத்தங்கள் கொண்டு வருவதற்கான நீதிமன்ற அதிகாரங்கள்.

2.3 WRIT கட்டளையை வழங்கும் அதிகாரங்கள்.

2.4 தேர்தல் வாக்குரியமையளித்தல் தொடர்பான மனுக்களை விசாரணை செய்யும் அதிகாரங்கள்.

2.5 நீதிமன்றத்திற்கு அவதூறு இழைத்தல் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரங்கள். இந்த அதிகாரங்கள் விபரமாக கீழேகாட்டப்படுகிறது.

2.1 மேன்முறையீட்டு நீதிமன்ற அதிகாரங்கள். மேன்முறையீட்டு நீதிமன்ற அதிகாரங்கள் என்பது முதன்முறையாக நீதிமன்றம் மற்றும் ஏனைய நியாய சபைகளினால் விசாரணை செய்து முடிவுறும் வழக்குகளின் தீர்வு தொடர்பான மேன்முறையீடுகளை விசாரணை செய்து வருகின்றது.

2.2 திருத்தம் தொடர்பான நீதிமன்ற அதிகாரங்கள் , திருத்தம் தொடர்பான நீதிமன்ற அதிகாரங்கள் என்பது முதலில் செல்லும் நீதிமன்றம் மற்றும் ஏனைய நியாய சபைகளினால் விசாரணை செய்து முடிவடையும் வழக்குகளின் தீர்ப்புக்கள் தொடர்பான திருத்தங்கள் (REVISION) மற்றும் முன்பிருந்த நிலைக்குக் கொண்டு கட்டளைகள் "(RESTITUTION INTEGRUM) வழங்குவதாகும்.

இதற்கு மேலதிகமாக முதலில் செல்லும் நீதிமன்றம் மற்றும் ஏனைய நியாய சபைகளின் அறிக்கைகளைக் கொண்டு வரச் செய்து பரிசீலிக்கும் அதிகாரங்களும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு உரியனவையாகும்.

2.3 WRIT கட்டளை வழங்கும் அதிகாரங்கள்.

WRITகட்டளை வழங்கும் அதிகா ரங்கள் என்பது (Habeas Corpus) ஆட் கொணர்வு மனு , (Certiorari) சர்சி யோறாறி (Prohibition) தடை, (Precedendo), Mandamus ஆணை யீட்டெழுத்தாணை , (Quowarranto) போன்ற கட்டளைகள் வழங்குவதாகும்.

2.4 பொதுத் தேர்தல் மனுக்களை விசார ணை செய்யும் அதிகாரங்கள்.

பொதுத் தேர்தல் மனுக்களை விசாரணை செய்யும் அதிகாரங்கள் என்பது பாராளுமன்ற உறுபிப்பினர்களைத தெரிவு செய்து நியமிப்பதற்காக நடைபெறும் பொதுத் தேர்தல்களில் நடைபெறும் முறை யற்ற செயல்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் தேர்தல் மனுக்களை விசாரணை செய்தல்.

2.5 நீதிமன்றத்திற்கு அவதூறு விளைவித்தல் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரம் என்பது கீழ் நீதிமன்றத்திற்கு அல்லது நீதிமன்ற அதிகாரங்களை செயற்படுத்தும் ஏனைய ஏதாவதொரு நீதிமன்றத்திற்கு அவதூறு விளைவித்தல் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்தல்.

மேன்முறையீட்டு தலைமை நீதியரசர் "மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவராக" அறிமுகம் செய்வதுடன் கொழும்பில் மாத்திரம் நீதிமன்ற அமர்வுகளைக் கூட்டுவார்.

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் மேன்நீதிமன்றம்** (High Court)

இலங்கையில் செயற்படும் முதற்கட்ட குற்றவியல் நீதிமன்ற அதிகாரங்களை செயற்படுத்துகின்ற நீதிமன்றம் மேல் நீதிமன்றமாகும். மேல் நீதிமன்றம் தொடர்பாக கீழ்க் காணும் விடயங்கள் முக்கியமாகும்.

◆ சகல பாரதூரமான குற்றவியல் குற்றங்கள் தொடர்பாக வழக்குகளை விசாரணை செய்து குற்றவாளிகளுக்கு தண்டனை வழங் குதல். மரண தண்டனை வரையிலான தேவையான சட்டபூர்வமான தண்டனையை வழங்குவதற்கு மேல் நீதிமன்றத்தினால் முடியும்.

◆ மேல் நீதிமன்றத்தின் முன்பு ஜுரி சபையுடன் ஜுரி சபையில்லாமல் அல்லது நீதியரசர்கள் மூவர் அடங்கிய சபையினால் , ஜுரிமார் இல்லாத நீதிமன்ற விசாரணையும் நடாத்தும்.

**வழக்குரைஞர் சாறுக்க சமரசேகர**

◆ அத்மிரால்தி (Admiralty) நீதிமன்ற அதிகாரங்களும் (கடற்படை விவகாரம் தொடர்பான நீதிமன்ற அதிகாரங்கள்) மேல் நீதிமன்றத்திற்கு உரித்தானவையாக இருப்பதுடன் பொதுவாக கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் அவைகள் செயற்படுத்தப்படுகின்றது.

◆ பிணைக்கான கட்டளை வழங்குவதும் மற்றும் அவசரகாலச் சட்டவிதிகளை மீறுவது தொடர்பாக வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரங்களும் மேல் நீதிமன்றத்திற்கு உண்டு. (தொடரும்)

# வடக்கு மாகாண கல்வி திணைக்களம்
# க.பொ.த சாதாரண தர பரீட்சை- 2008

## மாதிரி வினாத்தாள் கணிதம்–1 பரீட்சை –1

**வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் 12 கல்வி வலயப் பாடசாலைகளுக்கும் பயிற்சிப் பரீட்சை நடாத்துவதற்காக தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட கணித பாட மாதிரி வினாத்தாள்கள்-5 வட மாகாண கல்விப் பணிப்பாளரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக வலம்புரியில் தொடர்ந்து வெளிவரும்.**

01. சுருக்குக. $1.7 - 0.8$

02. சுருக்குக. $4\sqrt{3} + \sqrt{3}$


03. $A = \{1, 2, 3, 4\}$ எனில் தொடை A இன் முதலிமை யாது?

04. சதுரமொன்றின் பரப்பளவு $4cm^2$ எனில் அதன் பக்கமொன்றின் நீளம் யாது?


05. $\frac{7}{21}$ ஐ எளிய வடிவில் தருக?

06. 4, 10 ஆகிய எண்களின் பொ.ம.சி யாது?

07. ஒவ்வொன்றும் a ரூபா விலையுள்ள 4 மாம்பழங்களின் விலை ரூபா 80 எனில், a ஒரு சமன்பாடு அமைக்குக?

08. 

$x = ?$



09. $y$ இன் பெறுமானம் யாது?


10. 7, 8, 9, 9, 10, 11, 12 இடையம் யாது?

11. $\sqrt{3} = 1.7$ எனில் $\sqrt{27}$ இன் பெறுமானம் யாது?

12. $\lg 2 = 0.3010$ எனில் $\lg 200$ ஐக் காண்க?

13. விரித்தெழுதிச் சுருக்குக. $(a+3)(a+4)$


14. சுருக்குக. $\frac{ax+a}{bx+b}$

15. 

ABCD ஒரு சரிவகம் மூலைவிட்டங்கள் O இல் வெட்டுகின்றன. சமபரப்பளவு கொண்ட முக்கோணச் சோடிகளில் 2சோடி களைப் பெயரிடுக.

16. 25 மாணவர் கொண்ட வகுப்பில் 15 பேர் பெண்கள் ஆவர். பெண்கள் என்ன சதவீதம்?

17. $(x-4)(x+5) = 0$ எனில் $x$ ஐக் காண்க?


18. 

வரிப்படத்தைப் பயன்படுத்தி A இன் ஆள்கூறுகளைத் தருக?

19. 3 மாணவர்களின் நிறைகளின் இடை 35kg ஆகும். அவர்களில் இருவரின் மொத்த நிறை 75kg. மூன்றாவது மாணவரின் நிறை என்ன?

20. $mx - my = z$ இல் m ஐ எழுவாயாக மாற்றுக?


21. $-1 \leq x < 2$ எனில் $x$ இன் நிறை எண் பெறுமானங்கள் யாவை?

22. 

உருவில் O வட்டத்தின் மையமாகும். $A\hat{C}B = 40°$ எனில் $x$ ஐக் காண்க?

23. 1 : 25 000 என்ற அளவிடைக்கு வரையப்பட்ட அளவிடைப் படத்தில் 3cm நளம் குறிக்கும் உண்மை நீளத்தை m இல் தருக?

24. அரை வட்ட வில் ஒன்றின் நீளம் 66cm எனில் அதன் ஆரையைக் காணக?


25. 

உருவில் காட்டப்பட்ட தரவுகளின்படி $\Delta ABC \equiv \Delta PQR$ ஆவதற்கு மேலும் தேவைப்படும் நிபந்தனை யாது?


26. காரணி பற்றிய அறிவைப் பயன்படுத்தி பெறுமானம் காண்க?
$25^2 - 25 \times 15$

27. இரண்டு செவ்வகங்களின் பரப்புகளின் விகிதம் 2 : 5 ஆகும். பெரிய செவ்வகத்தின் பரப்பளவு $120cm^2$ எனில் சிறியதன் பரப்பளவு யாது?

28. $2A = \begin{pmatrix} 4 & -8 \\ 6 & 0 \\ 10 & 2 \end{pmatrix}$ எனில் தாயம் A யைக் காண்க?

29 

$x$ இன் பெறுமானம் யாது?


30. 

உருவில் $\Delta ABC$ யினதும் $\Delta PQR$ இனதும் மொத்தப் பரப்பு $40cm^2$. $\Delta PBS$ இல் பரப்பளவு $6cm^2$ எனில் நிழற்றிய பகுதியின் பரப்பளவு யாது?

## பகுதி B


01. ரூபா 25 000 பெறுமதியான தொலைக்காட்சிப் பெட்டியை வாடகைக் கொள்வனவு முறையில் முற்பணமாக ரூபா 5000 செலுத்தி வாங்கலாம். எஞ்சிய தொகை 60% எளிய ஆண்டு வட்டியுடன் சமமான மாதத்த வணைக் கட்டீணங்களாக 10 மாதங்களில் செலுத்தப்பட வேண்டும்.
   1) கடன் தொகை யாது?
   2) மாதாந்தம் செலுத்தப்படும் கடன் பகுதி யாது?
   3) கடன் பகுதிக்குரிய ஒருமாத வட்டி யாது?
   4) மாத அலகுகளின் எண்ணிக்கை யாது?
   5) மொத்த வட்டி யாது?
   6) ஒரு மாதத் தவணைக் கட்டணம் யாது?

02. ABCD ஒரு செவ்வகம். அதன் நீளம் 17cm. அகலம் 14cm ஆகும். C யை மையமாகவும் 7cm ஐ ஆரையாகவும் கொண்ட கால் வட்டமும் AB யை விட்டமாகக் கொண்ட அரைவட்டமும் வரையப்பட்டுள்ளன.





   1) கால்வட்ட வில்லின் நீளம் யாது?
   2) அரை வட்ட வில்லின் நீளம் யாது?
   3) நிழற்றிய பகுதியின் சுற்றளவு யாது?
   4) அரைவட்டத்தின் பரப்பளவு யாது?
   5) கால்வட்டத்தின் பரப்பளவு யாது?
   6) நிழற்றிய பகுதியின் பரப்பளவு யாது?

03. அது ஒரு மழை நாளாகும். அன்று அலுவலகத்திற்கு வந்தோரில் சிலர் தொப்பி வைத்திருந்தனர். சிலர் குடை வைத்திருந்தனர். சிலரிடம் இவை எதுவும் இருக்கவில்லை.





தொப்பி வைத்திருக்காதோர் 8 பேர். குடை வைத்திருக்காதோர் 9 பேர். தொப்பி, குடை என்பவற்றில் எதையும் வைத்திருக்காதோர் 2 பேர். அன்று அலுவலகத்திற்கு வந்தோர் 20 பேர்.
   1) மேற்படி தரவுகளை வென்னுருவில் குறிக்க?
   2) குடை வைத்திருந்தோர் எத்தனை பேர்?
   3) குடை, தொப்பி இரண்டையும் வைத்திருந்தோர் எத்தனை பேர்?
   4) குடை, தொப்பி என்பவற்றில் யாதாயினும் ஒன்றை மட்டும் வைத்திருப்போரைக் குறிக்கும் பிரதேசத்தை நிழற்றிக் காட்டுக?
   5) அன்று அலுவலகத்திற்கு வந்தோரில் ஒருவர் விசேட அழைப்பின் போில் வெளியே செல்கின்றோம். அவர் தொப்பி மட்டும் வைத்திருப்பவராக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

04. 7cm ஆரையும் 14 cm உயரமும் கொண்ட திண்ம கூம்பு உருக்கப்பட்டு விரயமின்றி 3.5cm ஆரையுள்ள கோளங்கள் செய்யப்படுகின்றன.





   1) கூம்பின் கனஅளவு யாது?
   (விடையைப் பின்னமாக தருக)
   2) 3.5cm ஆரையுடைய கோளமொன்றின் கனஅளவு யாது?
   (விடையை பின்னமாக தருக)
   3) உருவாக்கப்பட்ட கோளங்களின் எண்ணிக்கை யாது?
   4) இதே போன்ற 12 கோளங்களை பெறுவதற்கு எத்தனை கூம்புகள் உருவாக்கப்பட வேண்டும்?

05. தரம் 11 இல் கணிதப் பாடப் பரீட்சைப் பத்திரம் I இல் பகுதி A இல் 40 மாணவர் பெற்ற புள்ளிகள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது. தரப்பட்டுள்ள திரள்மீடிறன் வளையியை பயன்படுத்தி,
   1) இடையத்தைக் காண்க?
   2) முதலாம் காலணையைக் காண்க?
   3) மூன்றாம் காலணையைக் காண்க?
   4) காலணை இடைவீச்சு?
   5) 35 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் என்ன சதவீதம்?
   6) இடையத்திலும் குறைந்த புள்ளிகள் பெற்றோர் என்ன சதவீதம்?



# அமெரிக்க அதிபர் தேர்தல் முறை



ஆர்.யு.பாலமுருகன்

உலகின் வலிமை மிகுந்த தலைவர்களுள் ஒருவராகக் கருத்தப்படுபவர் அமெரிக்க அதிபர். அவர் அந்த நாட்டு நாடாளுமன்றத்துக்கோ, அமைச்சரவைக்கோ கட்டுப்பட்டவரல்லர். எந்தப் பிரச்சினையிலும் தன்னிச்சையாக முடிவெடுக்க முடியும். அவரைப் பதவியிலிருந்து நீக்குவதும் சாதாரண விடயம் அல்ல. தேசத்துரோகம், கொள்ளை போன்ற மோசமான குற்றங்களுக்காக மட்டுமே அவர் மீது நாடாளுமன்றம் குற்ற விசாரணை செய்து பதவியிலிருந்து நீக்க முடியும். வேறு தண்டனை எதுவும் வழங்கிவிட முடியாது. உலகிலேயே இராணுவம், பொருளாதாரம், தொழில் நுட்பத்தில் வல்லரசாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் ஒரு நாட்டின் அதிபருக்கு இவ்வளவு அதிகாரங்கள் தரப்பட்டிருக்கின்றன என்பதால் அவரே உலகிலேயே அதிக வல்லமை படைத்தவராகிறார்.


இவருக்கு நேரெதிர் அமெரிக்காவின் துணை அதிபர். காலையில் எழுந்தவுடன் அதிபர் நலமாக இருக்கிறாரா? என்பதைக் கேட்டு தெரிந்து கொண்டு மீண்டும் தூங்கப் போய் விடலாம் என்று துணை அதிபரின் பணிகளைப்பற்றி நகைச்சுவையாக குறிப்பிடுவதுண்டு. அதிபருக்கு உடல் நிலை சரியில்லாமல் போய் செயல்பட முடியாத நிலைக்கு போனாலோ, அவர் இறந்து போனாலோ துணை அதிபர் அதிபராவார். இது தவிர செனட் அவையை வழி நடத்தும் பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அமெரிக்காவில் ஜனநாயகக் கட்சி மற்றும் குடியரசுக் கட்சி ஆகிய இரு தேசிய கட்சிகள் மட்டுமே தற்போது முக்கிய கட்சிகளாக இருக்கின்றன.

மூன்றாவது தேசியக் கட்சி உருவாவதற்கோ, மாநிலக்கட்சிகள் எழுச்சிபெறவோ வாய்ப்பு மிகவும் குறைவு. அதனால் இப்போதைக்கு இரு தேசியகட்சிகளின் வேட்பாளர்களே தொடர்ந்து அதிபராகவும் துணைஅதிபராகவும் இருந்து வருகின்றனர். நாடாளுமன்ற அவைகளையும் இரு கட்சிகளின் உறுப்பினர்கள் தான் நிரப்புகிறார்கள். அதற்காக வேறு கட்சி அல்லது சுயேட்சைகள் இடம்பெறுவதுண்டு. மற்றைய நாடுகளைப்போலல்லாமல் அமெரிக்க ாவின் அதிபர் தேர்தல் நடைமுறை மிகவும் சிக்கலானது. தேர்தல் நடப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே அதிபர் தேர்தலில் போட்டியிட விரும்புவோர் முன்னிலைப்படுத்தப்படுகின்றனர். தேர்தல் பிரசாரம், அதிபர் தேர்தலுக்கான பிரசாரம் இருகட்டங்களைக் கொண்டது.

முதலாவது கட்சிகள் நடத்தும் வேட்பாளர் தேர்தலுக்கான பிரசாரம். இரண்டாவது வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டதும் இரு கட்சிக்களுக்குகிடையே நடக்கும் போட்டி பிரசாரம். பொதுவாக அதிபராக இருப்பவரோ அல்லது துணை அதிபராக இருப்பவரோர் தான் அடுத்த தேர்தலுக்கு அந்தக் கட்சியின் சார்பில் வேட்பாளராவதற்கான வாய்ப்புகள் அதிகம். எந்தக் கட்சியை சேர்ந்தவர் அதிபராக இருக்கிறாரோ அந்தக்கட்சியின் வேட்பாளர் முன்னரே முடிபுசெய்யப் பட்டு விடுவார். அதில் போட்டியிருந்தாலும் கூட அதில் அவரே வெற்றிபெறுவார். அதிபர் புஷ் இரண்டுமுறை பதவி வகித்துவிட்டதாலும் துணை அதிபர் டிக் சீனி போட்டியிடப் போவதில்லையென அறிவித்துவிட்டதாலும் 2008 ஆம் ஆண்டு தேர்தலில் இந்த நிலை இல்லை.

வேட்பாளர் தேர்தல்கள், நமது நாட்டில் நடப்பதுபோல் வேட்பாளர்களை கட்சி மேலிடப் பிரதிநிதிகள் மட்டுமே முடிபு செய்வதில்லை. கட்சி உறுப்பினர்களும் பொதுமக்களும் வேட்பாளர்களை தேர்வுசெய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். வேட்பாளர்களை தேர்ந் தெடுப்பதற்காக கட்சிகளின் மாநிலப் பிரிவுகள் நடத்தும் தேர்தல்களே வேட்பாளர் தேர்தல் எனப் படுகின்றன. ஒரு கட்சியின் சார்பில் அதிபர் தேர்தலில் போட்டியிட விரும்புவோர் இந்தத் தேர்தலில் ஒவ்வொரு மாநிலமாக பிரசாரம் மேற்கொண்டு ஆதரவு திரட்டுவார்கள். பொதுவாக தேர்தல் நடக்கும் ஆண்டின் ஆரம்பத்திலிருந்தே வேட்பாளர் தேர்தல்கள் நடக்கின்றன. வேட்பளாளர் தேர்தல்களைப் பொறுத்தவரை ஒவ்வொரு மாநிலமும் வெவ்வேறு நடைமுறைகளைக் கடைப்பிடிக்கின்றன. கட்சிகளும் வெவ்வேறு விதிமுறைகளை கடைப்பிடிக்கின்றன. ஒவ்வொரு மாநிலத்திற்கென இரு கட்சிகளும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பிரதிநிதிகள் வாக்கை ஒதுக்கியிருக்கின்றன. இந்த எண்ணிக்கை நிலையானதல்ல. மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுவதுடன் கட்சிகளும் தங்கள் விதிமுறைகளின்படி வெவ்வேறு எண்ணிக்கையிலான பிரதிநிதிகளை ஒதுக்குகின்றன. எடுத்துக்காட்டாக 2008 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் சேர்த்து ஜனநாயகக்கட்சிக்கு 4029 பிரதிநிதிகள் வாக்கு உண்டு. வேட்பாளர் தேர்தலில் வெற்றி பெற வேண்டுமானால் 2025 பிரதிநிதிகளின் ஆதரவைப் பெற்றாக வேண்டும். குடியரசுக்கட்சியயைப் பொறுத்தவரை மொத்த பிரதிநிதிகள் வாக்குகள் 2380. வெற்றிபெறுவதற்கு 1191 வாக்குகள் தேவை. வேட்பாளர் தேர்தல்கள் காகஸ் மற்றும் பிரைமரி என்ற இரு பிரிவுகளைக் கொண்டது. இவற்றுக்கும் உட்பிரிவுகள் உண்டு. சில மாநிலங்களின் காகஸ் முறையிலும் சிலமா நிலங்களில் பிரைமரி முறை யிலும் வேட்பாளர் தேர்தலை கட்சிகள் நடத்துகின்றன.

ஒருமாநிலத்தில் ஒருகட்சி காகஸ் முறையில் தேர்தலை நடத்தினாலும் மற்றொரு கட்சி பிரைமரி முறையில் தேர்தலை நடத்தக் கூடும். பொதுவாக வேட்பாளர் தேர்தல்கள் முதலில் நடப்பது அயோவா(காகஸ்) மற்றும் நியூஹாம்ப்ஷயர் (பிரைமரி) மாநிலங்களில்



அமெரிக்க அதிபர் தேர்தலில், முதல் ஓட்டை நியூ ஹாம்ப்ஷையர் தொகுதியில் பதிவு செய்து விட்டு திரும்பும் அமெரிக்கர்.

தான். இதற்கு எந்தவொரு பிரத்தியேக காரணமும் இல்லை. ஆண்டு தொடக்கத்தில் அயோவாவில் தொடங்கும் வேட்பாளர் தேர்தல்கள் யூன்மாதம் வரை ஒவ்வொரு மாநிலமாக நடக்கும். இந்தத் தேர்தல்களில் கட்சியின் சார்பில் அதிபர் தேர்தலில் களமிறங்க விரும்புவர்கள் போட்டியிடுவார்கள். வேட்பாளர் தேர்தலில் பொது மக்கள் (அல்லது கட்சி உறுப்பினர்கள்) அளிக்கும் வாக்குகளின் அடிப்படையில் அந்தந்தப் போட்டியாளர்களுக்கு பிரதிநிதிகள் வாக்கு கிடைக்கும். அனைத்து மாநிலங்களிலும் வேட்பாளர் தேர்தல்கள் முடிந்ததும் கட்சிகளின் தேசியக் கூட்டம் நடக்கும் இக் கூட்டத்தில் அதிபர் வேட்பாளரை பிரதிநிதிகள் தேர்வு செய்வார்கள்.

**வேட்பாளர்கள் விவாதம்**

இருமுக்கிய கட்சிகளும் வேட்பாளர்களை அதிகாரபூர்வமாக அறிவித்ததும் அவர்கள் இருவரும் ஒரே மேடையில் தோன்றி விவாதம் நடத்துவார்கள். தேர்தலுக்கு முன்பாக குறைந்தது இரண்டு முறையாவது இந்த விவாதம் நடக்கும்.

**தேர்தல் நாள்**

அமெரிக்க அதிபர் தேர்தல் என்பது அதிபர் மற்றும் துணை அதிபர் ஆகிய இருவருக்குமான தேர்தல் ஆகும். இது 220 ஆண்டுகால பாரம்பரியம் கொண்டது. அமெரிக்காவின் அனைத்து தேர்தல் நடைமுறைகளும் நாள்காட்டியின் அடிப்படையில் நடத்தப்படுவது சிறப்பம்சம். ஒவ்வொரு லீப் ஆண்டும் நவம்பர் முதல் திங்கட்கிழமைக்கு அடுத்துவரும் செவ்வாய்க்கிழமையில்

இந்தஆண்டு நவம்பர் 4) அதிபர் தேர்தல் நடக்கிறது. அரசியல் சட்டப்படி தேர்வாளர் குழு மூலமாகவே அதிபர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். எனினும் இந்தத் தேர்வாளர் குழுவினர் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவதால் அதிபர் வேட்பாளருக்கு மாநில வாரியாக மக்கள் செல்வாக்கு இருந்தாக வேண்டும்.

அமெரிக்காவின் ஐம்பது மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் ஆளுகைக்கு உட்பட்ட தலைநகரப் பகுதியான கொலம்பியா மாவட்டம் ஆகியவற்றிலிருந்து ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தேர்வாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

இந்த எண்ணிக்கை அந்தந்த மாநிலங்களில் உள்ள நாடாளுமன்ற (செனட் மற்றும் பிரதி நிதிகள் அவை) உறுப்பினர்களின் எண் ணிக்கைக்கு சமம். கொலம்பியா மாவட்டத்திற்கு நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் இல்லை என்ற போதிலும் 1964ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டத்திருத்தப்படி 3 தேர்வாளர்களை தேர்ந்தெடுக்கலாம். கட்சியின் மாநிலத் தலைமை தங்களுக்குரிய தேர்வாளர்களை முன்னரே நியமித்து விடுகின்றன. (இதற்கும் மாவட்ட அளவிலான தேர்தல் மற்றும் பிரசாரம் உண்டு). வாக் காளர்கள் எந்தக் கட்சியின் வேட்பாளரைத் தேர்ந் தெடுக்க விரும்புகிறார்களோ அந்தக் கட்சி நியமித்த தேர்வாளர் குழுவுக்கு வாக்களிக்க வேண்டும். அதாவது வாக்குச்சீட்டில் அதிபர் வேட்பாளரின் பெயருக்குப் பதிலாக அவரது கட்சியின் தேர்வாளர் குழுவினரின் பெயர்களோ அல்லது சுருக்கமாக கட்சிகளின் பெயர்களோ இருக்கும்.

வாக்காளர்கள் அவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கவேண்டும். பல்வேறு மாநிலங்களிலும் தேர்ந்தெடுக்கப்படும் தேர்வாளர் குழுவினர் பின்னர் கூடி அதிபரைத் தேர்ந் தெடுப்பார்கள்.

ஒரு மாநி லத்தின் அதிக வாக்குகளை (சில மாநிலங்களில் 50 சதவீதத்திற்கும் அதிகமான) வேட் பாளர் ஒருவர் பெற்று விட்டால் அந்த மாநி லத்தின் அனைத்து தேர்வாளர் வாக்குக ளையும் அவரே பெற்றுவிடுவார்.

உதாரணமாக ஒருமாநிலத்தின் தேர்வாளர்கள் குழுவின் எண்ணிக்கை 30என வைத்துக் கொண்டால் அந்த மாநிலத்தில் நடைபெற்ற தேர்தலில் ஒருவேட்பாளர் மற்றவர்களை விட அதிக(அல்லது 50சதவீதத்திற்கும் அதிகமாண) வாக்குகளைப்பெற்று விட்டால் அவர் அந்த மாநிலத்தின் 30 தேர்வாளர்களையும் பெற்று விடுவார்.

(மெய்ன் மற்றும் நெப்ராஸ்கா ஆகிய மாநிலங்கள் மட்டும் வேட்பாளர்கள் பெறும் வாக்குகளின் விகிதாசார அடிப்படையில் தேர்வாளர்களை ஒதுக்கீடு செய்கின்றன.) தேர்வாளர்கள் அனைவரும் அந்த வேட்பாளரின் கட்சியால் நியமிக்கப்பட்டவர்கள் என்பதால் பின்னர் நடக்கும் அதிபரைத் தேர்ந்தெடுக்கும் கூட் டத்தில் அவருக்கு ஆதரவாகவே வாக்களிப்பார்கள் ஒரு கட்சியால் நியமிக் கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வாளர்கள் மாற்றுக் கட்சி வேட்பாளருக்கு வாக்களிப் பதும் உண்டு.

இதைத் தடுப்பதற்கு சில மாநிலங்களில் சட்டம் இருக்கிறது. ஆனால் இதுவரை யாரும் தண்டனை பெற்றதில்லை. அமெரிக்க அதிபர் தேர்தல் நடைமுறையை உற்று நோக்கினால் அதிபராகத் தேர்ந் தெடுக்கப் படுவர் நாடு முழுவதும் மக்களின் பெரும் பான்மையானவாக்கைப் பெற்றிருக்க வேண்டிய அவசியம் இல்லை என்பது தெரிய வரும். அதாவது மாநில ரீதியில்தான் அதிபரின் வெற்றிக் கணக்கிடப்படுகிறதே தவிர நாட்டின் ஒட்டு மொத்த வாக்குகளின் அடிப்படையில் அல்ல. உதாரணமாக 2000 ஆம் ஆண்டு நடந்த அதிபர் தேர்தலில் குடியரசு கட்சி வேடபாளரான புஷ் நாடு முழுவதும் பதிவான வாக்குகளில் 47 சத வீதத்தையும் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஜனநாயக்கட்சி வேட்பாளர் அல்- கோர் 48 சதவீத வாக்குகளையும் பெற்றனர். ஆனால் தேர்வாளர் வாக்குகளின் அடிப்படையில் புஷ் வெற்றிபெற்றார். அதிபர் தேர்தலை மத்திய அரசு நடத் துவது இல்லை என்பது கவனிக்க வேண்டிய மற்றொரு விடயம். ஒவ்வொரு மாநிலமும் அந்தந்த மாநில சட்டத்துக்கும் மத்திய அரசியல் சட்டத்துக்கும் உட்பட்டு வெவ்வேறு முறைகளில் ஒரே நாளில் தேர்தல்ளை நடத்துகின்றன. அதிபரைத் தேர்ந்தெடுக்கும் தேர்வாளர்களைத் தேர்ந் தெடுப்பது மட்டுமே தேர்தலின் நோக்கம்.

நாடு முழுவதும் 538 தேர்வாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இது நாடாளுமன்ற செனட் அவை (ஒரு மாநிலத்துக்கு 2 உறுப்பினர் வீதம் மொத்தம் 100) உறுப்பினர்களின் எண்ணிக்கை, பிரதி நிதிகள் அவை (மொத்தம் 435) உறுப்பினர்களின் எண்ணிக்கை, கொலம்பியா மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட தேர்வாளர்களின் எண்ணிக்கை (3) ஆகியவற்றின் கூடுதலுக்குச் சமம்.

**தேர்வாளர்கள் கூட்டம்**

மாநிலங்களில் நடக்கும் தேர்தல்களின் முடிபுகள் வெளியானதுமே அதிபர் யார் என்பது கிட்டத்தட்ட முடிபாகிவிடும். ஏனெனில் எந்த வேட்பாளருக்கு எத்தனை தேர்வாளர்கள் இருக்கிறார்கள் என்பது தெரிந்து விடும். தேர்தல் முடிந்து பின்னர் வரும் டிசம்பர் மாதத்தின் இரண்டாவது புதன் கிழமைக்கு அடுத்து வரும் திங்கட்கிழமை அன்று அந்தந்த மாநிலத் தலைநகரங்களில் (கொலம்பியா மாவட்டத்துக்கு வோஷிங்டனில்) கூடுவார்கள் ஆக 51 இடங்களில் ஒரே நேரத்தில் தேர்வாளர்கள் கூட்டங்கள் நடக்கும்.

வாக்குச்சீட்டு அல்லது வெற்றுத்தாள் மூலமாக அதிபருக்கான வாக்கைத் தேர்வாளர்கள் அளிப்பார்கள். நடைமுறையில் பெரும்பாலான மாநிலங்களில் அனைத்து வாக்குகளும் ஒரே வேட்பாளருக்குச் செல்லும். அதிபர் தேர்தலுக்கான முடிபு அறிவிக்கப்பட்ட சிறிது நேரத்திலேயே அதே நடைமுறைப்படி துணை அதிபருக்கான தேர்தலும் நடக்கும் மொத்த முள்ள 538 தேர்வாளர் வாக்குகளில் ஒரு வேட்பாளர் குறைந்த பட்சம் 270வாக் குகளைப் பெற்றால் அவர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும்.

சில நேரங்களில் எந்த வேட்பாளரும் 270வாக்குகளைப் பெறாவிட்டால் அதிபரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை நாடாளுமன்ற பிரதிநிதிகள் அவை ஏற்கும்.

நடைமுறையில் இரண்டு வேட்பாளருக்கு அதிகமானோர் தேர்தலில் போட்டியிட்டாலோ அல்லது இரு வேட்பாளர்களும் 269 வாக்குகளை பெற்றாலோ இந்தநிலை ஏற்படலாம் இதுவரை 1800களில் இருமுறை மட்டுமே நாடாளுமன்ற பிரதிநிதிகள் அவை மூலம் அதிபர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

துணை அதிபருக்கும் இதே நிலை ஏற்பட்டால் செனட் அவை துணை அதிபரைத் தேர்ந்தெடுக்கும். ஜனவரி 20ஆம் திகதி அதிபரும் துணை அதிபரும் பதவி ஏற்பார்கள்.

# இலங்கை விவகாரங்களில் இந்தியாவின் தலையீடு

## பொருளாதார அரசியல் ரீதியாக குழப்பங்களை ஏற்படுத்தும்

## -தேசிய பிக்கு முன்னணி தெரிவிப்பு

இந்தியா எமது உள்நாட்டு விவகாரங்களில் தலையிட முனைவதானது பொருளாதார, அரசியல் ரீதியாக நாட்டை மெல்ல குழப்புவதற்கேயாகும். இந்தியாவின் தாளத்திற்கெல்லாம் அரசும் ஜனாதிபதியும் ஆடிக் கொண்டிருக்கின்றனர். இதற்கு நாம் ஒரு போதும் இடங்கொடுக்கக் கூடாது. இவ்வாறு தேசிய பிக்கு முன்னணியின் பிரதான செயலாளர் அத்தனயாலே சமித்ததேரர் தெரிவித்தார். நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை கொழும்பு தேசிய நூலக ஆவணப்படுத்தல் சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஆரம்ப காலத்திலிருந்து இந்தியாவின் தலையீடு இலங்கையில் மெல்ல மெல்ல ஊடுருவியிருந்தாலும் தற்போதே அது விஸ்வரூபம் எடுத்துள்ளது. இந்தியாவின் தலையீடு குறித்து ஒவ்வொரு கட்சியும் மற்றும் தரப்புகளும் தமது சுய நலத்திற்கேற்ப வெவ்வேறுபட்ட கருத்துக்களை கூறிவருகின்றன. ஏன் அரசுக்குள்ளேயே பலவிதமான கருத்துக்கள் இருக்கின்றன. நாடு தனது திட்டத்தை செவ்வனே கொண்டு செல்கிறது. இந்தியா தான் இங்கு ஆக்கிரமிக்க முனைகின்றது என அரசுக்கு சார்பாகவும் சிலர் கூறுகின்றனர். ஆகவே நாம் அரசியல் சார்பு கட்சி அல்லாவிட்டாலும் தேசிய பிக்கு முன்னணி என்ற வகையில் எமது நிலைப்பாட்டையும் முன்வைக்கவேண்டிய கடப்பாடு எமக்குண்டு.

தமிழ்நாட்டு முதலமைச்சர் கருணாநிதி இலங்கையில் நடக்கும் யுத்தத்தை நிறுத்தும்படியாக இலங்கை அரசுக்கு அழுத்தத்தை கொடுக்கும்படி இந்திய அரசை வற்புறுத்தி போராட்டம் நடத்துவது புலிகளை பலப்படுத்துவதற்கேயன்றி இலங்கை தமிழ் மக்கள் மீது கொண்டுள்ள உண்மையான அனுதாபத்தின் பேரில் அல்ல என்பதை முதலில் நாம் நன்கு புரிந்துகொள்ளவேண்டும்.

தனது சொந்த நாட்டு மக்கள் மீதே கரிசனை கிடையாத கருணாநிதிக்கு இலங் கைத் தமிழ் மக்கள் மீதா கரிசனை ஏற்படப் போகின்றது? எத்தனையோ பல நாடகங்களுக்கும் திரைப்படங்களுக்கும் கதை வசனம் எழுதிய கருணாநிதியின் மற்றுமொரு திரைக் காவியமே தற்போது இந்தியாவில் கொழுந்து விட்டெரிந்துகொண்டிருக்கும் போராட்டம்.

புலிகளை பலப்படுத்துவதன் மூலம் தனது அதிகாரத்தை இலங்கையில் உறுதிப்படுத்தவே இந்தியா முயல்கிறது. வடக்கிலும் யுத்தம் நிறுத்தப்பட்டு ஜனநாயகம் ஏற்படுத்தப் பட்டால் அங்குள்ள சீமெந்து போன்ற வளங்களும் இந்தியாவுக்கு இலங்கை அரசால் தாரை வார்க்கப்படும். அண்மையில் உத்தியோக பூர்வ விஜயம் எனக்கூறிக்கொண்டு இந்தியாவுக்கு விஜயத்தை மேற்கொண்ட பஸில் ராஜ பக்ஷ சில தந்திரமான செயற்பாடுகளை மேற்கொள்ளவே சென்றிருப்பது நன்கு புலனாகிறது.

அதேபோன்று அண்மையில் "றோவின்" முக்கியஸ்தர் ஒருவர் இலங் கைக்கு வந்து புலிகளைச் சந்தித்த விடயம் இலங் கை அரசுக்கும் நன்கு தெரியும்.

இலங்கையின் எண்ணெய் வளத்தை இந்தியாவுக்கு விற்க ஒப்பந்தம் செய்து இலங்கைக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தவே மஹிந்த அரசு முனைகிறது. சம்பூர் விடுவிக்கப்பட்ட தாக அரசு கூறினாலும், அங்குள்ள மக்கள் இன்னமும் அகதிமுகாம்களிலேயே சொல்லொணா துயரங்களுடன் வாழ்ந்து வருகின்றனர்.

பிள்ளையானை கிழக்கில் அதிகாரத்தில் அமர்த்தியதன் மூலம் இந்தியாவும் இலங்கை அரசும் தமது கைங்கரியத்தை மேற்கொள்ள எத்தனிக்கின்றன. கிழக்கை புலிகளிடமிருந்து மீட்டது போன்று வடக்கும் மீட்கப்பட்டால் இந்தியாவுடன் இரகசிய ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வடக்கும் இந்தியாவிடம் தாரைவார்க்கப்படும் பாரிய அபாயம் ஏற்படும் என்றார். (ஓ)

# பல்வேறு துன்பங்களுக்கு மத்தியில் நாம் கல்வி கற்று வருகின்றோம்

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

யாழ். பல்கலைக்கழக மாணவர் விடுதியில் படையினர் நுழைந்து மாணவர்களை பதற்றத்திற்கு உள்ளாக்கும் வகையில் நடந்து கொண்டுள்ளனர். இவ்வாறான செயற்பாடுகளால் எமது கல்வியும் வாழ்வும் பாதிக்கப்படுகிறது. மாணவர்களை அச்சுறுத்துகின்ற இவ்வாறான செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும் இவ்வாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தெரிவிக்கையில், இம் மாதம் முதலாம் திகதி மாலை பல்கலைக்கழக விடுதிகளின் சூழலில் படையினர் பெருமளவில் குவிக்கப்பட்டனர். பின்பு திடீரென ஆனந்தகுமாரசாமி விடுதிக்குள் நுழைந்த படையினர் மோப்ப நாய்களுடன் சோதனை யிட்டதுடன் தமக்கு எதிராகச் செயற்பட்ட பல்கலைக்கழக பழைய மாணவனை கொன்றுவிட்டதாகக் கூறியும் இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டால் எமக்கும் இது தான் தண்டனை எனக் கூறி மாணவர்களை அச்சுறுத்தும் வகையில் நடந்துகொண்டனர்.

இவ்வாறு பல்கலைக்கழக மாணவர்கள் மீது அச்சுறுத்தல்கள் மேற்கொள்வதனை குறிப்பிட்ட தரப்பினர் நிறுத்துதல் வேண்டும். மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்த நேரத்தில் அச்சுறுத்தல் தன்மையுடன் படையினர் சோதனையிட்டதன் காரணமாக மாணவர்கள் பெரும் அச்சத்தின் மத்தியில் உளரீதியான பாதிப்புக்குள்ளானார்கள். அத்துடன் மாணவர்களையும் விடுதியையும் படம் பிடித்துச் சென்றுள்ளனர். இதனால் மாணவர்களது கல்விச்செயற்பாடுகள் முழுமையாகப் பதிக்கப்பட்டன. இரவுக்கான உணவு எடுப்பதற்கு மாணவர்கள் கடும் சிரமங்களை அனுபவிக்க நேர்ந்தது.

மிகவும் கொடுமையான சூழலில் பல்வேறு துன்பங்களுக்கு மத்தியில் நாம் கல்வியைக் கற்று வருகிறோம். இவ்வேளையில் இவ்வாறான செயற்பாடுகள் மூலம் எமக்கு பதற்றத்தையும் அச்சுறுத்தல்களையும் ஏற்படுத்துவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாமலிருக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

# லிபியா உள்ளிட்ட நாடுகளில் இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்பு

இலங்கை இளைஞர், யுவதிகளுக்கு விரைவில் லிபிய மற்றும் மத்தியதரைக் கடலைச் சூழவுள்ள நாடுகளில் அதிக அளவில் தொழில் வாய்ப்பு கிடைக்கவுள்ளது. லிபிய நாட்டு தொழில், மனிதவள, தொழிற் பயிற்சி அமைச்சருடன் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஹில்டன் ஹோட்டலில் கால்நடை வள அபி விருத்தி பிரதி அமைச்சர் கே.ஏ. பாயிஸின் தலைமையிலான தூதுக்குழு நடத்திய பேச்சு வார்த்தைகளின் பலனாக இந்த வாய்ப்பு கிட்டியுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இச் சந்திப்பின்போது கால்நடைவள அபிவிருத்தி பிரதி அமைச்சர் கே.ஏ.பாயிஸ் விடுத்த வேண்டுகோளின் பயனாக லிபியா மற்றும் மத்தியதரைக் கடலைச் சூழவுள்ள நாடுகளின் பாற்பண்ணைகளில் இலங்கை இளைஞர், யுவதிகளுக்கு அதிக அளவு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. அத்துடன் அந் நாடுகளின் விவசாய பண்ணைத் தொழில் முறைகளுக்கு ஏற்ற வகையில் குறுங்கால பயிற்சியை லிபிய நாட்டில் பெற்றுக் கொடுத்து பின்னர் அவர்களைக் கொண்டு உள்நாட்டு பயிலுனர்களை பயிற்று வித்து லிபிய மற்றும் மத்தியதரைக் கடலைச் சூழவுள்ள நாடுகளில் வேலைக்கு அமர்த்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

தேசிய கால்நடை அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக சுற்றாடல் உல்லாசத் துறை யில் லிபிய நாட்டு முதலீட்டாளர்களை ஈடுப டுத்தி அதன்மூலம் இலங்கையில் பாற் பண்ணை அபிவிருத்தியை முன்னெடுக்கவும் இச்சந்திப்பின் போது இணக்கம் காணப் பட்டுள்ளதால் உள்ளூரில் சுற்றாடல் உல்லா சத் துறையில், பாற்பண்ணை நடவடிக்கை களிலும் வேலைவாய்ப்புக்களை அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (ஓ-2,6)

# வாரம் ஓர் யாழ்ப்பாணத்து மூலிகை

### சந்தனம்

மெல்லிய கிளைகளைக்கொண்ட நடுத்தர அல்லது சிறிய மரம்; இது கன்று நிலையில் அருகில் உள்ள தாவரங்களின் வேர்த் தொகுதியில் ஒட்டுண்ணியாக காணப்படும் (Semi-rootparasitic trec) பட்டைப் பகுதி நிலவாக்கில் பிளவுற்றது. கறுப்பு அல்லது



சிவப்பு வண்ணத்துடன் காணப் படும்.

தண்டின் கட்டைப்பகுதி வெளிப்புறம் வெண்மையாகவும் மணம் இன்றியும் உள்ளது; உள்புறம் வைரக்கட்டை- கரு பளுப்பு நிறம், மஞ்சள் பளுப்பு அல்லது சிவப்பு பளுப்பு நிறத்துடன் மிக்க மணம் கொண்டு காணப்படுகிறது.

இலைகள் நீள் வட்டவடிவானவை ; பளபளப்பானவை ; மலர்கள் பழுப்பு நிறம் கொண்டவை ; மணமற்றவை ; மஞ்சரிகள் நுனி அல்லது இலைக்கோணத்தில் அமைந்தவை ; கனிகள்கெட்டியானபகுதிகொண்டவை; இவை கடும் ஊதா நிறத்தில் கோளவடிவாக காணப் படும். விதைகள் கோள அல்லது முட்டை வடிவின.

### பரம்பலும் இன விருத்தியும்

யாழ். மாவட்டத்தில் இணுவில், நீர்வேலி பிள்ளையார் கோவில், திருநெல்வேலி போன்ற இடங்களில் காணப்படுகின்றது. விதைகள் மூலமும், வேர்க்கன்றுகள் மூலமும் இன விருத்தி அடையலாம்.

சந்தனத்தில் கலப்படம் அதிகம் ஆகையால் சந்தனக் கட்டைகளை மணமும், மஞ்சள் நிறமுடையதாக வாங்கி அதைச் சந்தனக் கல்லில் நீர் விட்டு உரைத்துச் சேகரித்த விழுதை காய வைத்து அதை சூரணமாக்கி கொள்ளவேண்டும். இதில் ஒரு கிராம் காலை, மாலை தேன் அல்லது கற்கண்டுடன் கொடுக்க சிறுநீர் கழியும் போது ஏற்படும் எரிச்சல் தீரும். மூலம் தணியும். இருதயம், மூளை இவற்றைப் பலப்படுத்தும்.

### சந்தன எண்ணெய்

முதிர்ச்சியடைந்த சந்தன மரத்தின் வைரக் கட்டையை பொடி செய்து நீரில் கொதிக்க வைத்து வடி கட்டி எடுக்கப்படும் எண்ணெய் சந் தன எண்ணெய் எனப்படும். (Steam-Disti llatian method) இது மிகவும் வாசனையு டையது. இதனால் நீர் கடுப்பு, பால்வினை நோய்கள் தீரும். தோள் நோய்கள் வராமல் தடுத்து தோலை பாதுகாக்கின்றது.

### கூந்தலுக்கு நறுமணம் தூபம்

சந்தனத்தூள், கிச்சிலிக்கிழங்கு( உலர்ந்தது), வெள்ளைக்குங்குலியம், சாம்பிராணி இவற்றை இடித்து வைத்துக்கொண்டு நீராடிய பின் தூபகலசத்தில் இட்டு வரும் புகையைக் கூந்தலில் மணம் பிடிக்க கூந்தல் மணம் பெறும். உடல் சுறு சுறுப்பு அடையும். மயிரி லும் பளபளப்பு ஏற்படும். இப்படியான இயற்கை முறைகளைப் பயன்படுத்தினால் கூந்தல் தொடர்ச்சியாக உதிர்வதையும் தடுக்கலாம்.

### சந்தனக்கலவைப்பவுடர்

சன்னச் சல்லடையில் பல முறை சலித்த சந்தனத்தூள், மைதாமா வகைக்கு 100 கிராம், பச்சைக்கற்பூரம் 25 மில்லிக்கிராம், குங்குமப்பூ 1/2 கிராம் பொடி செய்து கலந்து சேகரித்து வைத்துக்கொள்ளவும் குழந்தைகள் மேல் பவுடர் போலதூபிவர, தோள்நோய்கள், கோடைக் கட்டிகள், வியர்வை நாற்றம் வராது. எல்லா வகையினருக்கும் கோடைகாலத்திற்கு ஏற்றபவுடர்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

### சந்தன சர்பத்

சந்தனத்தூள் 25 கிராம் ( சிவல் போல சீவி யும் சிறுதூளாகவும், சந்தனக்கட்டையைப் பிரித்துக்கொள்ளவும் 2 லீற்றர் நீரில் ஒரு நாள் முழுவதும் உறையவிட்டு அடுப் பேற்றி காய்ச்சி 3/4 லீற்றராக சுண்டி வரும் போது பிசைந்து வடி கட்டி, அதில் சீனி 500 கிராம் இட்டுக் காய்ச்சி வடி கட்டிய பின்னரும் காய்ச்சி பாகு பதம் வரும் சமயத்தில் மூங்கிலுப்பு,ஏலம்,இலவங்கம்வகைக்கு இரண்டு கிராம் குங்குமப்பூ 1/2 கிராம் பொடி செய்து போட்டுக்கலக்கி இறக்கி வைக்க சர்பத் ஆகிறது. இது இரத்தத்தை சுத்தி செய்து தேகத்தை குளிர்ப்பித்து மார்புத்துடிப்பு, மனப் பயம் முதலியவற்றை குணப்படுத்தும்.

## பாடநெறிக் கட்டணம் மீளச் செலுத்துதல்

கல்வி டிப்ளோமா முகாமைத்துவம் மற்றும் அதற்கு சமமான டிப்ளோமா முழுநேர பாடநெறியைத் தொடரும் ஆசிரியர்களுக்கு அவர்களால் செலுத்தப்பட்ட பாடநெறிக் கட்டணத்தை மீளச் செலுத்துமாறு கல்வியமைச்சின் 2003/08 சுற்றுநிரூபம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்பிரகாரம் யாழ். மாவட்டத்தில் சில ஆசிரியர்கள் இப் பணத்தைப் பெற்றுள்ளதாக தெரிய வருகின்றது. (ஓ-19)

அறிவாளி ஒருமுறைதான் ஏமாற்றப்படுவான். முட்டாளோ பலமுறை.

-அப்துர் ரஹீம்

வலம்புரி

## அரசாங்கத்தைக் கவிழ்க்கும் ஐ.தே.கட்சியின் முயற்சி வெற்றி தருமா?

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு எதிர்க்கட்சிகள் இணைந்து பாரிய கூட்டணியொன்றை அமைக்கவும் அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தலைமை தாங்கவும் ஏற்பாடாகியுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசைக் கவிழ்ப்பதற்கான காரணம் என்ன? என்பதைப் பொறுத்தே எதிர்க்கட்சிகளின் கூட்டு வெற்றி தருமா? இல்லையா? என்ற முடிபை எடுக்க முடியும்.

அதேநேரம் எதிர்க்கட்சிகள் அரசை வீழ்த்துவதற்கு முன்னதாக மக்களை ஈர்க்கக் கூடியதான சில விடயங்களைச் செய்தாக வேண்டும். சிலவற்றை செய்யாமலும் விட வேண்டும்.

இங்கு மகிந்தவின் அரசைக் கவிழ்த்து தாம் ஆட்சிக்கு வருவதுதான் நோக்கமெனில் அதற்கான சாத்தியப்பாடுகள் இல்லை என்றே கூறவேண்டும்.

ஏனெனில் மகிந்த அரசு செய்தவேலையைத்தான் ஐக்கிய.தேசியக் கட்சியும் செய்திருந்தது. எனவே அரசை வீழ்த்துவதற்கான காரணங்களை ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் மக்களிடம் முன்வைக்கவேண்டும். அதனை மக்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

அவ்வாறாயின் யுத்தத்தின் கொடூரம், விலையேற்றம், நிம்மதியற்ற வாழ்க்கை, தொடரும் இனப்பிரச்சினை என்ற அம்சங்களை முன்வைப்பது கட்டாயமானதாகும்.

இந்தப் பிரச்சினைகளை முன்வைக்கும் அதேநேரம் நாம் ஆட்சிக்கு வந்தால் மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கப்போகிறோம் என்பதனையும் எதிர்க்கட்சிகள் முன்வைப்பது கட்டாயமானதாகும்.

இங்குதான் எதிர்க்கட்சிகள் ஓர் முக்கிய சவாலை சந்திக்கின்றனர். அதாவது மகிந்த அரசு இனப்பிரச்சினையைத் தீர்க்காது யுத்தம் நடத்துகிறது. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் யுத்தம் நிறுத்தப்படும். இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்படும். அந்தத் தீர்வுத்திட்டம் இவ்வாறு அமையும் என்பதைப் பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டும்.

இதைவிடுத்து மகிந்தவின் அரசைக் கவிழ்க்கப்போகிறோம் எனக் கங்கணம் கட்டுவதால் எந்தப் பிரயோசனமும் ஏற்படாது.

ஆக இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு -யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்துவதற்கு -எதிர்க்கட்சிகள் தயாரா என்பதை முதலில் தங்களிடம் கேட்கவேண்டும்.

இதைவிடுத்து அரசை கவிழ்க்க எதிர்க்கட்சிகள் ஒன்று சேருவது அரசை மேலும் வலுப்படுத்தவே உதவும்.

இந்தியத் தலையீட்டை அனுமதிக்க முடியாதெனக் கூறிய ஐக்கிய தேசியக் கட்சியினால் எதனையுமே சாதிக்கமுடியாதென்பதே இறுதிமுடிபு.

# உலக சந்தையில் தேயிலையின் விலை வீழ்ச்சியால் 30 இலட்சம் மக்கள் பாதிப்படைந்துள்ளனர்

## அரசின் பொருளாதாரக் கொள்கையே காரணம் என்கிறது ஐ.தே.க

(கொழும்பு)

நாட்டின் தேசிய வருமானத்தின் மூன்றில் ஒரு பங்கு தேயிலைஏற்றுமதியாகும். அதன்விலைதற்போது உலகசந்தையில் பாரிய வீழ்ச்சியடைந்திருக்கின்றது. அரசாங்கத்தின் நாணயமற்ற பொருளாதாரக் கொள்கையால் தேயிலை உற்பத்தியில் தங்கியிருக்கின்ற சுமார் 30இலட்சம் மக்கள் மறைமுகமாக வதைக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் காலி மாவட்ட எம்.பி.யு மான கஜந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் கிலோ 390 ரூபாவாக இருந்த தேயிலையின் விலை தற்போது கிலோ 250 ரூபாவாக வீழ்ச்சியடைந்திருப்பது குறித்தும், எமது நாட்க்கான வருமானம் குறித்து மஹிந்த சிந்தனை ஏன் சிந்திக்கத் தவறியுள்ளது என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசுகையிலேயே கஜந்த கருணாதிலக்க எம்.பி இதனைத்தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கூறுகையில் , தேயிலைஉற்பத்தி என்பது இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பாரிய பங்களிப்பினை செய்து கொண்டிருக்கின்றது. கடந்த 3மாத காலத்திற்கு முன்னர் எமது தேயிலை உற்பத்தியானது உலக சந்தையில் நன்மதிப்பைப் பெற்றிருந்தது. அதன் அடிப்படையில் இலங்கைத் தேயிலை கிலோ 390 ரூபாவுக்கும் சில சந்தர்ப்பங்களில் அதிலும் அதிகமான விலையிலும் உலக சந்தையில் கொள்வனவு செய்யப்பட்டது. ஆனால் .இன்று எமது நாட்டு தேயிலைக்கான நிர்ணய விலை கிலோ 250 ரூபாவுக்கு குறைவடைந்திருப்பதால் எமது நாட்டு வருமானத்தின் பாரிய தொகை கைநழுவிப் போய்இருக்கின்றது.

விலை வீழ்ச்சி அடைவதற்கான முக்கிய காரணம் என்னவென்று அறிந்து கொள்ளமுற்படாத ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கூட்டமைப்பு அரசாங்கம் இதனை மூடிமறைத்துக்கொண்டிருக்கின்றது. தேசிய உற்பத்தியில் தேசிய வருமானத்தில் அக்கறை கொள்ளாத அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையை எந்த வகையில் இணைத்துக் கொள்வது அல்லது ஏற்றுக்கொள்வது என்ற கேள்வி எழுந்திருக்கின்றது.

ஒருகிலோக்கிராம் தேயிலை சந்தைவிலைக்கு பூரணமடையச் செய்ய நாலரைக்கிலோக்கிராம் தேயிலைத் தளிர் அவசியமாகின்றது. இதன் உற்பத்தி செலவுகளின் மொத்தத்தொகை 300 ரூபாவையும் தாண்டி நிற்கின்றது. இந்நிலையில், 250ரூபாவுக்கு ஏற்றுமதி செய்வதால் அதன் நஷ்டம் உற்பத்தியாளர்களையே போய்ச் சேருகின்றது . சிறுதேயிலைத் தொழிலை நம்பி சுமார் 4 லட்சம் பேர் ஜீவனம் நடத்துகின்றனர். மஹிந்த சிந்தனையின் பிரகாரம் நிர்ணயித்த உரத்தின் விலை 350 ஆகும்.

ஆனால் ,அதே உரத்தின் இன்றைய விலை 5ஆயிரத்துக்கு 400 ஆக இருக்கின்றது. இது மஹிந்த சிந்தனையின் மானியமா என ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்திடம் கேட்க விரும்புகிறது. தேசிய வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கினை பெற்றுக்கொண்டிருக்கும் தேயிலை உற்பத்தியை ஊக்குவிக்க அரசாங்கம் தற்போது 150 கோடி ரூபாவை ஒதுக்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. இது ஒரு கண்துடைப்பாகும். கோடிக்கணக்கில் நட்டத்தை ஏற்படுத்திய மிஹின் ஏயாருக்கு செலவழிக்க மீண்டும் தயாராகி வருகின்றது. அரசாங்கத்தால் ஏன் தேசிய வருமானத்தின் முக்கிய பங்காளியாக இருக்கும் தேயிலை உற்பத்தியை அபிவிருத்தி செய்ய உரிய நடவடிக்கை எடுக்க முடியாது இருக்கின்றது என்பதை தெளிவு படுத்த வேண்டும். தேயிலை உற்பத்தியை பராமரித்து உலக சந்தையில் எமது தேயிலையின் தரத்தையும் விலை யையும் அதிகரித்து நாட்டுக்கு வருமானத்தை ஈட்டுவதுடன் அத் தொழிலை நம்பியிருக்கின்ற சுமார் 30 இலட்சம் மக் களை வாழ வைப்பதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்கின்றார். (இ)

# தொழிலாளர் சட்டம் மீறப்பட்டமை தொடர்பில் சர்வதேசத்திடம் முறையிடுவதற்கு தீர்மானம்

## கல்விசார் ஊழியர் சங்கம் தெரிவிப்பு

நடைமுறையிலுள்ள தொழிலாளர் சட்டம் மீறப்பட்டமை தொடர்பில் சர்வதேசத்திடம் முறையிடுவதற்கு கல்வி சார் ஊழியர் சங்கம் தீர்மானித்துள்ளது. இலங்கை ஆசிரியர் தொழிற்சங்கங்களை சேர்ந்தவர்கள் சுகவீன விடுமுறையை எடுக்கும் உரிமையும் கல்வி அதிகாரிகளினால் மீறப்பட்டுள்ளது.

சுகவீனவிடுமுறை எடுப்பது தொடர்பில் பல்வேறு வழிமுறைகள் இருக்கின்றன என்பதை அறிந்து கொள்ளாத ஆசிரியர்களை சுதந்திரமாக துன்பப்படும் வகையில் வலயபிரிவு கல்வி அதிகாரிகளுக்கு கல்வியமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

விசேடமாக கடந்த 30 ஆம் திகதி சுகவீன விடுமுறையில் இருந்த ஆசிரியர்கள் வலய மற்றும் பிரிவு காரியாலயங்களுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.இந்த நிலை மை அரசாங்கத்தினால் கையொப்பமிட்டுள்ள சர்வதேச தொழிலாளர் பிரகடனத்தை அப்பட்டமாக மீறுகின்ற நடவடிக்கையாகும்.

சர்வதேச தொழிலாளர் பிரகடனம் மீறப்பட்டமை தொடர்பில் சர்வதேச தொழிலாளர் அமைப்பு உள்ளிட்ட சகல தூதரகங்களிலும் முறைப்பாடு செய்வதற்கு கல்வி சார் ஊழியர் சங்கங்கள் தீர்மானித்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(இ)

# வரவு -செலவுத்திட்ட விவாதத்தின் போது அரசைக் கவிழ்ப்பதற்கு சதித்திட்டம்

## விமல் வீரவன்ச தெரிவிப்பு

பாராளுமன்றத்தில் நடைபெறவிருக்கும் வரவு - செலவுத்திட்ட விவாதத்தின் போது அரசாங்கத்தை க் கவிழ்விப்பதற்குத் திரைமறைவில் சதித்திட்டம் தீட்டப்பட்டிருப்பதாக தேசிய சுதந்திர முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

புதுடில்லி மற்றும் வாஷிங்டனின் உழவாளிகள் இலங்கை அரசாங்கத்தை தோற்கடிப்பதற்கு இரகசிய முயற்சிகளில் ஈடுபட்டு இருப்பதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் விரவன்ச கூறினார்.

இலங்கையில் பயங்கரவாதம் தோற்கடிக்கப்படுவதை விரும்பாத வெளி நாட்டு சக்திகள் இவ்வாறான இரகசியத்திட்டங்களில் ஈடுபட்டுள்ளன என நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட விமல் வீரவன்ச குறிப்பிட்டார்.

இலங்கைக்குத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர் தொண்டமான் புதுடில்லியின் தேவைகளையே நிறைவேற்றுவார் எனவும் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ. சந்திர சேகரன் ஏற்கனவே எதிர்க் கட்சியில் ஒரு காலை ஊன்றியுள்ளார் எனவும் அவர் குற்றஞ் சாட்டினார். தமிழ் மக்கள் விடுதலை ப்புலிகள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதால் கிழக்கு மாகாண முஸ்லிம் கட்சிகள் அச்சமடைந்திருப்பதாக விமல் வீரவன்ச கூறினார். கடந்த வருடம் வரவு- செலவுத்திட்டத்தின் போதும் இரகசியமான அரசியல் காய் நகர்த்தல்கள் மேற்கொள்ளபட் டிருந்தன என அவர் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறான அரசியல் காய் நகர்த்தல்களாலேயே வெளிநாடுகளின் தலையீடுகள் இலங்கையில் அதிகரிக்க முயற்சிப்பதாகவும் எனினும் அதற்குத் தாம் அனுமதிக்கப் போவதில்லையென தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச மேலும் கூறினார்.

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

### முழுப்பொறுப்பையும் உன் தோள்களில் ஏற்றுக்கொள்



இந்த வாழ்க்கை ஒரு கடினமான உண்மை. அதுவலிமை பெற்றதாக இருந்தாலும் அதன்மூலம் வழியைக் கண்டுபிடித்துத் தைரியமாகச் செல்லுங்கள். எதையும் பொருட்படுத்தாதீர்கள் ஆன்மா வலிமை வாய்ந்தது. சாதாரண தெய்வங்களின் மீது அது பொறுப்பைச் சுமத்துவதில்லை. நம்முடைய அதிர்ஷ்டங்களுக்கு நாமே காரணம் . நாமே நம்முடைய துன்பங்கக்கும் காரணம். நமது நன்மை தீமைகளை நாமே உண்டாக்கிக் கொள்கிறோம். நாமே நம் கைகளால் கண்களை மறைத்துக்கொண்டு"இருட்டாக இருக்கிறதே"என்று கதறுகிறோம். கைகளை விலக்கி விட்டு ஒளியைப் பாருங்கள். நீங்கள் ஏற்கனவே முழுமை பெற்றவர்கள் ஒளி பெற்ற வர் கள்.

பிரச்சினைக்கு இது ஒன்று தான் தீர்வு. அந்தோ பிறர்மீது பழி போடுபவர்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருக்கிறார்கள். பொதுவாக அவர்கள் துன்பப்படுபவர்களாக அவர்கள் தங்களுடைய தவறுகளின் மூலமாகவே இந்தக் கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். இது அவர்களின் நிலைமையை மாற்றுவதில்லை. பிறர் மீது பழி போட முயல்வது அவர்களை மேலும் பலவீனப்படுத்துகிறது. ஆகவே உங்கள் தவறுகளுக்குப் பிறரை பழி சொல்லாதீர்கள்.

# ஈழத் தமிழருக்கு நிவாரண உதவிகள் அவசியம் ஆனால் அதுவே நிரந்தர நிவாரணமாகிவிடாது

## ப.ம.க.நிறுவுனர் டாக்டர் ராமதாஸ்

இலங்கையில் போர் நிறுத்தப்பட்டு ஈழத்தில் அமைதி சக வாழ்வு திரும்புவதற்கு நடவடிக்கையை இந்திய பேரரசு உடனடியாக எடுத்து அதனை நிறைவேற்ற வேண்டும் என்று அனைத்துக் கட்சி கூட்டத்தில் முக்கிய தீர்மானமாக நிறை வேற்றப்பட்டது.

அதனை இரண்டு வார காலத்திற்குள்ளாக நிறைவேற்றி முடிக்கவேண்டும் என்றும் அனைத்துக் கட்சிக்கூட்டம் கெடு விதித்து அறிவித்தது. அந்த தீர்மானங்கள் உடனடியாக மத்திய அரசுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. இடையில் எத்தனையோ நிகழ்வுகள் ஆனால் நாம் விரும்புகின்ற போர்நிறுத்தம் ஏற்படவில்லை. ஈழத்தில் அமைதியும் சகவாழ்வும் திரும்ப வில்லை.

இந்நிலையில் ஈழத்தமிழர்களின் துயரங்களைத் துடைப்பதற்காக நிதி திரட்டும் வேளையில் தமிழக அரசும் முதல் அமைச்சரும் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள். அது ஒன்றே நிரந்தர நிவாரண மாகிவிடாது. ஈழத்தமிழர்களுக்கு அமைதியும் சக வாழ்வும் நிரந்தரமாக அமைய வேண்டும் அதற்கு அங்கே போர் நிறுத்தம் ஏற்பட வேண் டும் ஆனால் நிதி திரட்டல் என்ற இப்போதைய நடவடிக்கை போர்நிறுத்தம் மேற்கொள்ளப் படவேண்டும் என்ற நமது முதன்மையான கோரிக்கையை பின்னுக்குத் தள்ளி விடக் கூடாது என்பதை சுட்டிக்காட்டியிருந்தேன் .அதற்கு முதலமைச்சர் கருணாநிதி நீண்ட விளக்கம் அளித்திருக்கிறார்.

போர் நிறுத்தத்திற்கான நடவடிக்கையை இந்தியப்பேரரசு உடனடியாக மேற்கொண்டு நிறைவேற்ற வேண்டும் என்று அக்டோபர் 14ஆம் திகதி அனைத்துக்கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக்கூட்டி தீர்மானம் நிறைவேற்றி அறை கூவல் விடுத்த முதலமைச்சருக்கும் மத்திய அரசின் நிலையையும் அதிகார எல்லையையும் நாம் உணர வேண்டாமா? இன்னொரு நாட்டுப்பிரச்சினையிலே பக்கத்து நாடு ஓரளவுக்குத்தானே நேரடியாகத் தலையிட முடியும் என்று கேட்டு அடங்கிப்போக நினைக்கும் கருணாநிதிக்கும் இடையே எத்தனை இடைவெளி என்பதை தமிழர்கள் அனை வரும் நிச்சயம் எண்ணிப்பார்க்கத் தவறமாட்டார்கள்.

இடையில் அக்டோபர் மாதம் 17ஆம் திகதி சென்னையில் செய்தியாளர்களுடன் ஓர் நேர்காணல் நடந்துள்ளது. இன்னொரு நாட்டின் உள்நாட்டுப்பிரச்சினையில் அண்டையிலே உள்ள நாடு குறுக்கீடு செய்யமுடியுமா என்பது செய்தியாளர்கள் எழுப்பியிருக்கும் கேள்வி.

ஏன் பங்களாதேஷ் எப்படி வந்தது? இது அந்த கேள்விக்கு அளிக்கப்பட்டிருக்கும் பதில் இப்படி பதில் அளித்திருப்பவர் வேறு யாரும் அல்ல முதலமைச்சர் கருணாநிதி தான் ஆனால் 15 நாள் இடைவெளிக்குப் பிறகு இன்னொரு நாட்டு பிரச்சினையிலேயே பக்கத்து நாடு ஓரளவுக்குத்தான் நேரடியாகத் தலையிட முடியும் என்றும் மத்திய அரசின் நிலையையும் அதிகார எல்லையையும் நாம் உணர வேண்டாமா? என்றும் மத்திய அரசு அதன் சக்திக்கு ஏற்றவாறு உதவி வருகின்றது என்றும் அதே கருணாநிதிதான் விளக்கம் அளித்துக்கொண்டிருக்கிறார்.

இலங்கையில் நடந்துகொண்டிருக்கிற போரை நிறுத்துவதற்காக இராணுவத்திற்கு இராணுவம் என்று தலையிடத்தேவையில்லை. அப்படித் தலையிடுங்கள் என்று நாம் வற்புறுத்தவும் இல்லை. ஆனால் பரம்பரை பரம்பரையாக மீன்பிடித்துக்கொண்டிருக்கும் கடலில் மீன்பிடிக்கச் செல்கிற நம்முடைய தமிழர்கள் இலங்கைக் கடற்படையினரால் அநியாயமாக சுட்டுவீழ்த்தப்படுகிறார்களே அதைத் தடுக்கவாவது தலையிடக்கூடாதா?

தமிழக மீனவர்களில் இனியொருவர் சுட்டுக் கொல்லப்பட்டால் ,இந்திய இராணுவம் சும்மா இருக்காது என்று எச்சரிக்கை செய்வதற்குக் கூடவா இந்தியப் பேரரசுக்கு அதிகாரம் இல்லை?அனைத்துக் கட்சிக் கூட்டத் தீர்மானங்களை மத்திய அரசுக்கு அனுப் பிவைத்தோம். இலங்கைத் தூதரை அழைத்து இந்தியா கண்டனம் தெரிவித்தது.

இலங்கை அதிபருடன் பிரதமர் தொலைபேசியில் பேசினார்.வெளியுறவுத் துறை மந்திரி பிரணாப்முகர்ஜி சென்னைக்கு வந்து என்னைச் சந்தித்துப் பேசினார். சென்னையில் வரலாறு படைத்த மனிதச் சங்கிலி அணிவகுப்பு நடத்தப்பட்டது.இராமேஸ் வரத்தில் திரைப்படக் கலைஞர்களின் பேரணியும், பொதுக்கூட்டமும் நடைபெற்றன. சென்னையில் அனைத்து நடிகர்களும் ஒன்று திரண்டு உண்ணாநோன்பு இருந்தார்கள்.

இவையெல்லாம் இலங்கைத் தமிழர்களுக்கான நடவடிக்கைகள் கிடப்பில் போட்டு விட்டன என்பதற்கான சம்பவங்களா? இல்லவே இல்லை என்று முதலமைச் சர் வாதிட்டிருக்கிறார்.ஆனால், இவற்றால் ஏற்பட்ட விளைவுகள் என்ன?இலங்கையில் சண்டை ஓய்ந்திருக்கிறதா? ஈழத்தமிழர்கள் அமைதியாக வாழும் சூழல் உருவாகியிருக் கிறதா? இல்லவே இல்லை.

எனவே இலங்கைப் பிரச்சினையில் மட்டும் நேரடியாக தலையிட அதிகாரம் இல்லை என்ற வாதத்தை ஏற்றுக்கொள்ளவே முடியாது. முதலமைச்சர் இப்போது இதை எப்படி ஏற்றுக்கொள்கிறார் என்பது எனக்கு விளங்கவில்லை. இதனை மத்திய அரசிடம் வலியுறுத்துங்கள் என்று சொன்னால், பா.ம.க.வை நோக்கி கையை நீட்டுகிறார் முதலமைச்சர். தமிழகம் என்றால், தமிழக அரசு என்றுபொருள். அதன் அடிப்படையில் தான் முதலமைச்சரை சந்திக்கிறார்கள். பேசுகிறார்கள். எனவேதான், தமிழகத்தின் சார்பில் நீங்கள் வலியுறுத்துங்கள் என்று சொல்கிறோம்.தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகவேண்டும் என்ற கோரிக்கையில் முழுக்க முழுக்க எங்களுக்கு உடன்பாடு என்பதை பலமுறை தெரிவித்திருக்கின்றேன். உறுப்பினர்களின் இராஜினாமா என்பது மக்களவைத் தலைவரிடமும், மாநிலங்களவைத் தலைவரிடமும் நேரடியாக வழங்கப்பட வேண்டியவை. அதனால்தான் தி.மு.க உறுப்பினர்கள் என்றைக்கு நேரடியாக தங்களது பதவி விலகல் கடிதங்களை அவைத் தலைவரிடமும் வழங்குகிறார்களோ அன்றைய தினத்தில் அடுத்த நிமிடமே பா.ம.க. உறுப்பினர்கள் தங்களது பதவி விலகல் கடிதத்தை அவைத்தலைவரிடம் வழங்குவார்கள் என்பதையும் அறிவித்து வந்திருக்கிறேன். இந்த விளக்கம் எல்லாம் இங்கே நமக்குள் சண்டை போட்டுக்கொள்ள வேண்டுமென் பதற்காக அல்ல. இலங்கையில் ஈழத்தமிழர்க ளுக்கு எதிரான சண்டை நிறுத்தப்பட வேண் டும் என்பதற்காகத்தான் இவ்வாறு டாக்டர் ராமதாஸ் கூறியுள்ளார். (ஓ)

# சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கு தீவிரவாதிகள் மிரட்டல்

## பாதுகாப்பை பலப்படுத்த ஏற்பாடு

கேரளாவில் உள்ள பிரசித்திபெற்ற ஐயப்பன் கோவிலுக்கு தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளனர்.இக்கோவிலில் மண்டல பூஜை மற்றும் மகரவிளக்கு தரிசனம் செய்வதற்காக இலட் சக்கணக்கில் பக்தர்கள் வருவார்கள். இந்த ஆண்டு மண்டல பூஜை அடுத்த மாதம் தொடங் குகிறது.

எனவே ஐயப்பன் கோவிலில் பாதுகாப்பு ஏற்பாடுகளை பலப்படுத்த கோவில் நிர்வாகம் மற்றும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

சபரிமலை ஐயப்பன் கோவிலில் பாதுகாப்புக்காக முதல் முறையாக மத்திய பொலிஸ் பாதுகாப்பு படையை ஏற்பாடு செய்துள்ளனர். மத்திய பொலிஸ் சூப்பிரண்டு சுரேஷ் குமார் மற்றும் முன்தினம் சென்று சபரி மலை மத்திய பொலிஸாரை எங்கெங்கும் பாதுகாப்புக்கு நிறுத்தலாம் என்று ஆய்வு செய்தார்.



18ஆம்படியின் கீழ்ப்புறம் திருநிற்றம் வடக்கே நடை மாளிகைப்புறத்தம்மன் கோவில் பகுதிகளில் மத்திய பொலிஸாரை காவலுக்கு நிறுத்தவும் திட்டமிட்டுள்ளனர். விழாக்காலம் முடியும் வரை மத்திய பொலி ஸார் இங்கு தங்கி இருந்து பாதுகாப்பு பணியை மேற்கொள்ளவும் திட்டமிட்டுள்ளது. (ஓ-6)

# தமிழக முதலமைச்சர் தனது ஆட்சியை தக்க வைப்பதற்காக தமிழர் நலனை கைவிடலாமா?

## தே.மு.தி.க. தலைவர் விஜயகாந் கேள்வி

(சென்னை)

இலங்கை அரசின் வெறித்தாக்குதலுக்கு ஆளான தமிழ் மக்களுக்கு உதவி அளிக்கும் வகையில் தமிழ் நாட்டில் உள்ள பல்வேறு தரப்பினரும் பல வகையான உதவிகளைத் திரட்டி தமிழக அரசிடம் தந்து வருகின்றனர்.



இந்த உதவிகள் உண்மையில் இலங்கைத் தமிழ் மக்களுக்கு போய்ச்சேருமா என்ற சந்தேகம் வலுத்துவருகிறது என்று தே. மு.தி. க. தலைவர் விஜயகாந் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் பேசும்போது, இங்கு திரட்டப்படும் உதவிகளை ராஜ பக்ஷ விடம் தருவதைவிட கடலில் கொட்டுவதோ அல் லது தீ வைத்து கொளுத்தி விடுவதோகூட நல்லதாக இருக்கும்என்றுகூறியுள்ளார்.

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட சுனாமியால் பெரும்பாலும் இலங்கைத் தமிழர்களே பாதிக்கப்பட்டனர். அப்போது நான் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்காக 6 இலட்சம் ரூபா நன்கொடையாக கொடுத் தேன். உலகம் முழுவதிலும் இருந்து இலங்கை அரசுக்கு உதவிகள் வந்து சேர்ந்தனர்.

இருப்பினும் ,இலங்கை அரசு அந்த உதவிகளை பெற்றுக்கொண்டு தம்மிடமே வைத்துக்கொண்டது. இலங்கைத்தமிழ் மக்களுக்குரிய நிவாரணம் சென்றடையவில்லை. அதனால் பல பேர் உயிர் இழக்க நேரிட்டது.

இலங்கை அரசின் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள தமிழ் பகுதிகளில் நாம் அளிக்கின்ற உதவிகள் அங்குள்ள இந்திய தூதரகத்தில் மேற்பார்வையில் தமிழ் மக்களுக்கு நேரில் கொடுக்கப்பட வேண்டும். அதே போன்று விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் செஞ்சிலு வைச் சங்கம் மூலமோ அல்லது ஐ.நா. சபையின் மூலமோ நேரடியாக உதவிகளை வழங் கச்செய்யவேண்டும்.

அங்கு நடக்கும் போரை காரணம் காட்டி இலங்கை அரசு , ஐ.நா. சபை அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்களுக்கும் தங்களால் பாதுகாப்புத்தர முடியாது என்று வெளியேற்றிவிடுகிறது. அத்தகைய நிலைமை ஏற்படாமல் கவனிக்க வேண்டிய கடமை மத்திய , மாநில அரசுகளுக்கு உண்டு.

இலங்கையில் சுமார் 5 இலட்சம் தமிழர்கள் தங்கள் பரம்பரைவீடுகளிலிருந்து இடம் பெயர்ந்து அகதிகளாகவுள்ளனர். மேலும் போர் நடக்கும் பகுதிகளில் 4 இலட்சம் தமிழர்கள் சிக்கித்தவித்துக்கொண்டுள்ளனர். எந்த நேரமும் உயிர் பறிபோகும் என்ற நிலைமையில் தாய்மார்களும் , குழந்தைகளும் வயதானவர்களும் மரண பயத்தில் உள்ளனர்.

இந்த நிலைமையில் அவர்களுக்கு இன்றியமையாத தேவை முதலில் போர் நிறுத்தம் தான் . பிறகு நிவாரண நடவடிக்கை எல்லாம்.

ஆகவே , தமிழ் நாடு வெறும் உதவிகளை வழங்குவதோடு நிறுத்திக்கொண்டு இலங்கை அரசை போர்நிறுத்தம் செய்ய வற்புறுத்த தவறினால் ஒரு பெரிய மனித குல பேரழிவைச்சந்திக்க வேண்டிவரும் இது தமிழக முதல் - அமைச்சருக்கு தெரியாததல்ல.

ஒரு நாட்டின் உள் விவகாரத்தின் இன்னொரு நாடு எல்லா நேரங்களிலும் தலையிடக்கூடாது என்று சொல்ல முடியாது.

மனிதாபிமான அடிப்படையிலும் , இனப் பேரழிவு நேரிடும் போதும், அகதிகள் பெருமளவில் தங்கள் நாட்டிற்குள் குடிபுகும்பொழுதும் ஒரு நாடு இன்னொரு நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடுவது உலகம் ஒப்புக் கொண்ட உண்மையாகும்.

இலங்கையில் இன்று ஏற்பட்டுள்ள போர் நெருக்கடியால் இந்த மூன்று காரணங்களும் உண்டாகியிருக்கின்றன .ஆகவே இந்திய அரசு , இலங்கை அரசை வழிக்குக் கொண்டு வர இயலும்.

அண்மையில் கூட ஜோர்ஜியா நாட்டில் தெற்கு ஒசட்டியா மாநிலத் தில் உள்ள ரஷியர்கள் பாதிக்கப்பட்டபோது ரஷியா தன்து படையை ஜோர்ஜியா நாட்டிற் குள் அனுப்பி அவர்களை காப்பாற்றியது. தமிழ் நாட்டு மக்களின் சார்பில் இலங்கைத் தமிழர் களைக்காப்பாற்ற இந்திய அரசிற்கு நெருக் கடி தரவேண்டியது தமிழக முதல மைச்சர் தனது ஆட்சியையும் , அரசியல் கூட் டணியையும் தக்க வைத்துக்கொள்ள தமிழர் நலன் களை கைவிடலாமா என்பதே கேள்வி இவ்வாறு விஜயகாந் கூறியுள்ளார். (ஓ)

# இலங்கை தமிழர் நிவாரண நிதி ரூ.5 கோடியை நெருங்குகிறது

இலங்கை தமிழர்களுக்கு நிவாரண உதவிகளை மக்கள் செய்யும்படி முதல் அமைச்சர் கருணாநிதி வேண்டுகோள் விடுத்தார். அவர் தனது சார்பில் ரூ.10 இலட்சம் கொடுத்தார். அதைத்தொடர்ந்து பொது மக்களும் பல்வேறு சங்கங்களும் முக்கிய பிரமுகர்களும் பணத்தை அள்ளிக்கொடுத்து வருகின்றனர்.

இதனால் தற்போது நிவாரண நிதி ரூ.5 கோடியை நெருங்கிக்கொண்டிருக்கிறது. கடந்த ஞாயிற்றுக்கிழமை வரை கிடைக்கப் பெற்ற தொகை ரூ.4 கோடியே 52 இலட் சத்து 63 ஆயிரத்து 115 ஆகும்.இதன் தொடர்ச்சியாக திங்கட்கிழமையும் ஏராளமானோர் இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நிதி கொடுத்தார்கள். திங்கள் மதியம் வரை மொத்தம் ரூபா. 4 கோடியே 88 இலட்சத்து 54 ஆயிரத்து 230 சேர்ந்துள்ளது. (ஓ-6)

# இந்தியன் கிரிக்கெட் லீக்கில் மீண்டும் இணைந்தார் யூசுப்



(கராச்சி)
பாகிஸ்தான் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர் மொஹமட் யூசுப் மீண்டும் சர்ச்சைக்குரிய இந்திய கிரிக்கெட் லீக் (ஐ.சி.எல்) அமைப்பில் இணைந்துள்ளார்.

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக அபுதாபியில் நடைபெறவுள்ள ஒருநாள் தொடருக்கான பாகிஸ்தான் அணியில் இணைக்கப்பட்ட நிலையிலேயே மொஹமட் யூசுப் இந்த முடிவை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அவர் பாகிஸ்தான் அணிக்காக எதிர்கால போட்டிகளில் விளையாடுவதில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுவருகிறது.

கடந்த 2007ஆம் ஆண்டு இருபது-20 உலகக் கிண்ண போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் இணைக்கப்படாததால் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் மொஹமட் யூசுப் ஐ.பி.எல். அமைப்பில் இணைந்தார்.

எனினும் அப்போதைய பாகிஸ்தான் கிரிக் கெட் சபை தலைவர் நஸீம் அஷ்ரப்பின் வலியுறுத்தலின் காரணமாக அந்த அமைப்பில் இருந்து விலகிய யூசுப் மீண்டும் பாகிஸ்தான் அணிக்காக விளையாடிவந்தார்.

இதனிடையே தங்களிடம் ஒப்பந்தம் செய்துவிட்டு விளையாட மறுத்த மொஹமட் யூசுப் மீது ஐ.சி.எல். சாரபில் வழக்குத் தொடரப்பட்டது.

அத்துடன் மொஹமட் யூசுப் இந்திய கிரிக்கெட் சபையினால் நடத்தப்படும் ஐ.பி.எல். போட்டியில் விளையாட முன் வந்தாலும் அவரை வாங்க எந்த ஐ.பி.எல். அணி உரிமையாளரும் முன்வரவில்லை.

இந்த பின்னணியிலேயே மொஹமட் யூசுப் மீண்டும் ஐ.சி.எல். அமைப்பில் இணைந்துள்ளார்.

அவர் நடைபெற்றுவரும் இந்த பருவகாலத்துக்கான ஐ.சி.எல். போட்டியில் விளையாட வாய்ப்பு உள்ளதாக தெரியவருகிறது. இதற்காக அவர் நேற்று முன்தினம் இந்தியா பயணமாகியுள்ளார். (5)

## டெஸ்ட் தரவரிசையில் காம்பீர் முன்னேற்றம்

(டுபாய்)

சமீபத்தில் நடைபெற்ற அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டில்லி டெஸ்ட் போட்டியில் இரட்டை சதம் அடித்த கௌதம் காம்பீர் ஐ.சி.சி. டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசையில் 11 இடங்கள் முன்னேறி முதல் முறையாக 18 ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடர் ஆரம்பமாகியபோது காம்பீர் 37ஆவது இடத்தில் இருந்தார். இந்த தொடரில் அவர் 463 ஓட்டங்களை குவித்துள்ளார்.

டில்லி டெஸ்டில் இரட்டை சதம் அடித்த மற்றொரு வீரரான லக்ஸ்மன் 5 இடங்கள் முன்னேறி 11ஆவது இடத்தை பெற்றுள்ளார்.

மூத்த வீரர் ராகுல் ட்ராவிட் 8 இடங்கள் பின்தங்கி 26ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட்டுக்கான பந்துவீச்சாளர் தரவரிசையில் ஓய்வு பெற்ற இந்திய அணித் தலைவர் அனில் கும்ப்ளே 19 ஆவது இடத்தில் உள்ளார். (5)

## பாகிஸ்தான் அணியில் 5 வேகப்பந்து வீச்சாளர்கள்

(லாகூர்)

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான ஒரு நாள் தொடருக்கான 14 பேர் கொண்ட பாகிஸ்தான் அணியில் 5 வேகப்பந்து வீச்சாளர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.

மேற்கிந்திய- பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகளைக்கொண்ட ஒரு நாள் தொடர் எதிர்வரும் 12 ஆம் திகதி அபுதாபியில் ஆரம்பமாகவுள்ளது. இதற்கான பாகிஸ்தான் அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

சொஹைப் மலிக் தலைமையிலான இந்த அணியில் சொஹைப் அக்தர், உமர் குல், சொஹைல் தன்வீர், ராவ் இப்திகார் அன்ஜீம் மற்றும் அப்துல் ரவூப் என 5 வேகப்பந்துவீச்சாளர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.

அணி விபரம்

சொஹைப் மலிக் (தலைவர்), மிஸ்பா உல் ஹக் (உப தலைவர்), சல்மான் பட், நஸீர் ஜம்ஷெத், யூனிஸ்கான், மொஹமட் யூசுப், சஹீட் அப்ரிடி, கம்ரன் அக்மல் (வி.கா.), சொஹைல் தன்வீர், உமர் குல், ராவ் இப்திகார் அன்ஜீம், பவாத் அலாம், அப்துல் ரவூப், சயீட் அஜ்மல். (5)

## தென்னாபிரிக்கா தொடர் வெற்றி

(கிம்ப்ளே)

கென்யாவுடனான இரண்டு போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரை தென்னாபிரிக்க அணி 2-0 என்ற கணக்கில் கைப்பற்றிக் கொண்டது.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற முதல் போட்டியில் 59 ஓட்டங்களால் வெற்றியீட்டிய தென்னாபிரிக்க அணி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த இரண்டாவது போட்டியில் 7 விக்கெட்டுகளால் இலகுவில் வெற்றியீட்டியது.

இதில் தென்னாபிரிக்காவின் கிம்ப்ளேயில் நடைபெற்ற இரண்டாவது போட்டியின் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய கென்யா அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 222 ஓட்டங்களை பெற்றது.

இதில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் வோடர் அதிகபட்சமாக 115 பந்துகளுக்கு 74 ஓட்டங்களை பெற்றார்.

பந்துவீச்சில் அல்பி மோர்கல் 3 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு சொன்க்சி 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

தொடர்ந்து பதிலெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 35.3 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 224 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டிக் கொண்டது.

இதில் ஜக் கலிஸ் 94 பந்துகளுக்கு ஆட்டமிழக்காது 92 ஓட்டங்களை பெற்றார். அத்துடன் தனது முதல் அரைச்சதத்தை பெற்ற ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஆஷிம் அம்லா 76 பந்துகளில் 78 ஓட்டங்களை பெற்று ஆட்ட நாயகன் விருதை வென்றார். அத்துடன் தொடர் நாயகன் விருது கலிஸுக்கு கிடைத்தது. (5)

## ஒபாமாவின் வெற்றிக்கான சாத்தியப்பாடு அதிகரிப்பு

அமெரிக்காவின் முதலாவது கறுப்பின ஜனாதிபதி என்ற வரலாற்றுப் புகழை ஜன நாயக் கட்சி வேட்பாளர் பராக் ஒபாமா பெறுக் கொள்வதற்கான சாத்தியம் அதிகமாகக் காணப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான இறுதி முடிவுகள் இன்று புதன்கிழமை வெளியாகவுள்ள நிலையில் காங்கிரஸில் பெரும்பான்மை பலத்தை ஜனநாயக் கட்சி பெறுவதற்கான சாத்தியங்கள் இருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

முதலாவது கறுப்பின ஜனாதிபதி என்ற பெருமைக்காக காத்திருக்கும் 47 வயதான ஒபாமா தேர்தல் மன்றத்தில் வெற்றி பெறுவதற்கான தேவையான 270 வாக்குகளை விட அதிகமான வாக்குகளைப் பெறுவதற்கான சாத்தியங்கள் இருப்பதாக கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

இருந்தபோதும் தேர்தல் மன்ற இறுதி முடிவுகள் வெளியாகும்வரை யார் வெற்றி பெறுவார்கள் என்பது தொடர்பில் நிச்சய மன்ற ஒரு நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில் சம்பிரதாய பூர்வமாக வாக்களிப்புக்கள் ஆரம்பத் தொகுதிகளில் ஒபாமா வெற்றி பெற்றுள்ளார்.

டிக்ஸ்வில்லி நொட்ச் மற்றும் நியூஹம்ஷ்யார் தொகுதிகளில் 15-6 என்ற ரீதியிலும் ஹார்ட் லொசேனில் 17-10 என்ற ரீதியிலும் ஒபாமா வெற்றி பெற்றுள்ளார்.

1968க்கு பின்னர் இத் தொகுதிகளில் ஜனநாயகக் கட்சியினர் வெற்றி பெறுவது இதுவே முதல் தடவையாகும். செனட்டின் பெரும்பான்மையை ஜனநாயகக் கட்சி பெறும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் ஈராக் விவகாரம், நிதி நெருக்கடி தொடர்பில் தான் வழங்கிய உறுதிமொழிகளை நிறை வேற்றுவதற்கான நடவடிக்கைகளை ஜனநாயகக் கட்சி ஜனவரியில் ஆரம்பிக்கும் என அவதானிகள் தெரிவிக்கின்றனர். (ச)

# இலங்கைக்கு ஆயுதம் அனுப்பும்போது தி.மு.க.என்ன செய்துகொண்டிருந்தது?

## ஜெயலலிதா கேள்வி



(சென்னை)

இலங்கை இராணுவத்துக்கு நவீன ஆயுதங்களை இந்திய அனுப்பியபோது தி.மு.க மத்திய அமைச்சர்கள் என்ன செய்தார்கள்? என செல்வி ஜெயலலிதா கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கைத் தமிழர்களின் மோசமான நிலைமையை நான் முதலில் எழுப்பியதில் இருந்து பாக் ஜலசந்தி வழியாக பெருமளவு நீரோட்டம் ஏற்பட்டிருக்கிறது.

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்கள் குறுகிய காலத்தில் மீறப்பட்டன. தனது எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் இராமேஸ்வரத்தில் முக்கிய திரைப்பட பிரமுகர்களின் கூட்டத்திற்கும் சென்னையில் மனிதச் சங்கிலி போராட்டத்திற்கும் ஏற்பாடு செய்தார் கருணாநிதி.

பின்னர் நீண்ட காலமாக பாதிக்கப்பட்டிருக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு உதவுவதற்காக நிதி திரட்டப்படும் என்று அறிவித்தார்.

இது போன்ற அவசரமான நடவடிக்கைகளுக்கு இடையில் என்னால் எழுப்பப்பட்ட சில அடிப்படை கேள்விகளுக்கு இன்னும் பதிலளிக்கப்படாமல் உள்ளன.

மத்திய அரசு ஆயுதங்கள்,வெடிபொருட்கள் மற்றும் அதிநவீன சாதனங்களை இலங்கைஇராணுவத்துக்கு அனுப்பியது உண்மை தானே?

தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்துவதற்கான சாதனங்களை பொருத்துவதற்காக இந்திய விஞ்ஞானிகளும் தொழில் நுட்ப வல்லுநர்களும் மத்திய அரசால் இலங்கைக்கு அனுப்பப்பட்டபோது தி.மு.க மந்திரிகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் என்ன செய்து கொண்டிருந்தார்கள்?

இலங்கையிலுள்ள தங்களது சகோதர சகோதரிகள் பாதிக்கப்பட்டுள்ளமை குறித்து தமிழக மக்கள் உண்மையான கவலை கொண்டுள்ள நிலையில் வசூலித்த பணத்தை வைத்துக் கொண்டு கருணாநிதி என்ன செய்யப்போகிறார்?

இலங்கை அரசிடம் அளித்து ;அந்தப் பணத்தை இலங்கைத் தமிழர்களை உயர்த்துவதற்கு பயன்படுத்தச் சொல்லி இலங்கை அரசைக் கேட்டுக்கொள்ளப்போகிறாரா?

தமிழர்களுக்குத் தேவையானவற்றை வாங்குவதற்காக மேற்படி நிதியைப் பயன்படுத்தி அதை இலங்கைக்கு அனுப்பப் போகிறாரா? இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (ச)

## ஈழத் தமிழர் நிதி 7 கோடியைத் தாண்டியது

(சென்னை)


இலங்கைத் தமிழர்களுக்காக முதலமைச்சர் கருணாநிதி திரட்டி வரும் நிவாரண நிதி இதுவரையில் 7 கோடியே 11 இலட்சத்து 33 ஆயிரத்து 701 இந்திய ரூபாயைத் தாண்டியுள்ளது.

கடந்த முதலாம் திகதியன்று நடிகர் சங்கம் நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்தின் போது திரட்டப்பட்ட 55 இலட்சத்து 79 ஆயிரத்து 8 ரூபாவை நடிகர் சங்கத்தலைவர் சரத்குமார் நேற்றுக் காலை முதலமைச்சர் கருணாநிதியிடம் நேரில் வழங்கினார்.

இதன்போது நடிகர் சங்கப் பொதுச் செயலாளர் ராதாரவி, பொருளாளர் கே.என். காளை மற்றும் மனோரமா, சார்லி, ஸ்ரீப்ரியா, கே.ராஜன், அலெக்ஸ், சத்யப்ரியா, ரித்தீஷ் ஆகியோரும் சரத்குமாருடன் சென்றிருந்தனர். (ச-5)

# போர்நிறுத்தம் ஒன்றைத் தவிர ஏனையவை நிறைவேற்றப்படுகிறது

## கருணாநிதி அறிக்கை



இலங்கைத் தமிழர் பிரச்சினையில் எதிர்ப் புணர்வை வெளிப்படுத்தவே பதவி விலக நேரிடும் என்று தீர்மானம் நிறைவேற்றினோம் என முதல்வர் கருணாநிதி விளக்கம் அளித் துள்ளார். இது குறித்து நேற்று அவர் வெளி யிட்ட அறிக்கையில்,

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றும்போது மத்திய அரசின் அதி கார எல்லை முதல்வருக்குத் தெரியாதா? என்று பா.ம.க. நிறுவுநர் டாக்டர் இராமதாஸ் கேட்டுள்ளார்.

நன்றாகத் தெரியும். தெரிந்துதான் தீர்மா னம் நிறைவேற்றினோம். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் எமது எதிர்ப்பு உணர்வை வெளிப்படுத்தவே இராஜினாமாச் செய்ய நேரிடும் என்று தீர்மானம் நிறைவேற்றினோம்.

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நிறைவேற் றப்பட்ட தீர்மானத்திற்குப் பிறகு தி.மு.க. நாடா ளுமன்ற உறுப்பினர்கள் என்னிடம் இராஜி னாமாக் கடிதத்தைக் கொடுத்தனர்.

அதன் பின்புதான் இந்தளவுக்கு வேகமாக நமது தீர்மானங்களை எல்லாம் ஏற்கக் கூடிய அளவுக்கும் போர்நிறுத்தம் என்ற தீர்மானத் தைக் கூட வலியுறுத்திக் கூறும் அளவுக்கும் நிலைமை மாறியுள்ளது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத் திய அரசின் செயற்பாடுகள் திருப்தியை அளிக்கின்றன. தமிழர்கள் அவதிப்படுவதை உணர்கின்ற மத்திய அரசும் தலைவர்களை யும் நாம் பெற்றிருக்கின்றோம்.

அவர்கள் நம் உணர்வை மதிக்கின்றார் கள். முடிந்தளவுக்கு உதவி செய்கின்றாங்கள். எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா நிதி திரட்டு வதையே மோசடி நாடகம், கபட நாடகம் என் கின்றார்.

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ. நிவாரணப் பொருள்கள் வழங்குவோம் என் பது மக்களை ஏமாற்றும் வேலை என்கின் றார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் திரட்டப்படும் நிதி அப்பாவி மக்களுக்குப் போய்ச் சேரும் என்ப தற்கு என்ன உத்தரவாதம் என்கின்றார்.

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந் நிவா ரண உதவிகள் மரணப்படுக்கையிலுள்ள இலங்கைத் தமிழர்களுக்குப் போய்ச் சேரு வது சந்தேகம் என்கின்றார்.

இத்தனை குரல்களும் வேறுபட்டு மாறு பட்டு ஒலிக்காமல் ஒன்றுபட்டு ஒலித்தால் மத் திய அரசின் முயற்சிகளை மேலும் தீவிரப் படுத்த அது உதவும்.

இல்லையேல் இலங்கைத் தமிழர்களின் தலைவிதி இப்படித்தான் என்று கடந்த கால நிகழ்வுகளையும் இக் கால நிகழ்வுகளையும் எண்ணி ஏங்கி எதிர்கால விடியல் வருமா? என்று கண்ணீர் விட வேண்டியதுதான்.

மயிலை மாங்கொல்லை பொதுக்கூட்டத் தில் நானும் (கருணாநிதி) நிதி அமைச்சர் அன் பழகனும் ஒன்றுபடுக தமிழர்களே என்று அழைப்பு விடுத்தோம்.

அதன் தொடர்ச்சியாக ஒக்டேபர் 14 ஆம் திகதி அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடாத்தி 6 தீர்மானங்களை நிறைவேற்றினோம். அதன் பிறகு திரைப்படக் கலைஞர்களின் பேரணி, உண்ணாவிரதம் வரலாறு காணாத மனிதச் சங்கிலி ஆகியவை நடந்தன.

இலங்கையில் போர்நிறுத்தம் என்ற ஒன் றைத் தவிர மற்றைய அனைத்தையும் நிறை வேற்றும் முயற்சியில் மத்திய அரசு ஈடுபட்டுள் ளது என்பதை விரிவாக எடுத்துக் கூறியுள் ளேன் என்று கருணாநிதி கூறியுள்ளார். (ச-5)

## ஒக்ரோபரில் மட்டும் 171 படையினர் பலி

(கொழும்பு)

வன்னிக் களமுனையில் ஒக்ரோபர் மாதத் தில் மட்டும் 171 படையினர் கொல்லப்பட்டுள் ளனர் என அரசாங்கம் அறிவித்துள்ளது. நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அவசரகால நீடிப்பு விவாதத்தின் போது எரிபொருள் அமைச் சர் ஜோன் செனவிரட்ண தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் வடக்கு நோக்கிய விடுதலைப் புலிகளுடனான மோதல்களில் 171 படையி னர் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும் 1122 சிறிலங்காப் படையினர் காயம டைந்து களத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட் டுள்ளனர். 38 பொதுமக்கள் கொல்லப்பட் டுள்ளனர். 68 பொதுமக்கள் காயமடைந் துள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க வெளி நாடு சென்றுள்ளதால் அவசர காலச் சட்டத் தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் பிரேர ணையை அமைச்சர் ஜோன் செனவிரட்ண சமர்ப்பித்து உரையாற்றியமை குறிப்பிடத் தக்கது. (ச)

## அவசர காலச் சட்டம் மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பு

(கொழும்பு)

அவசர காலச் சட்டத்தை நாட்டில் மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கும் பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் 75 அதிகப்படி யான வாக்குகளால் நிறைவேறியது.

இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக தேசிய சுதந்திர முன்னணி மற்றும் மக்கள் விடுத லை முன்னணி ஆகிய கட்சிகள் வாக்களித் தன.

வாக்கெடுப்பு நடைபெற்ற சமயம் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் சபையில் இருக்கவில்லை. (ச)

## அதிபர்...

பட்டிருந்தது.

எனினும் தற்போது அவர்களின் போக்கு வரத்துப் பிரச்சினைகள், செலவீனங்களைக் கருத்தில் கொண்டு கல்வி அமைச்சின் செய லாளரின் ஆலோசனையின் பிரகாரம் மாற்று நடைமுறை ஒன்றின் மூலம் யாழ்.மாவட்டத் திலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களின் சான்றிதழ்கள் பரிசீலிக்கப்படும்.

இது தொடர்பில் கல்வி அமைச்சின் செய லாளர் பண்டார, வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருடன் ஆலோசனை நடத்தியுள்ளதாகவும் குறிப்பிட் கல்வி அமைச் சின் மேலதிக செயலாளர் கே.முகமெட்தம்பி, விரைவில் மாற்று நடைமுறை அறிவிக்கப்படு மெனவும் தெரிவித்தார்.

இதேவேளை இந் நேர்முகத் தேர்வில் பங்குபற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தோர் கொழும்பில் தங்கியிருந்தால் அங்கு நடை பெறும் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள லாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## ஐக்கிய தேசியக் கட்சியின்...

ரூபாயாகவும் உயர்த்தப்படும் எனவும், வறு மை ஒழிப்பிற்காக 20 இலட்சம் பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு மாதாந்தம் ஐயா யிரம் வழங்கப்படும் எனவும் குறிப்பிடப்ப ட்டுள்ளது.

இதனைவிட, அரசாங்க ஊழியர்களின் சம்பளம் 20 வீதத்தால் அதிகரிக்கப்படும். ஓய் வூதியம் 3,500 ரூபாயாக அதிகரிக்கப்படும், எரிபொருள் பரல் ஒன்றின் பெறுமதி 59 ரூபா யால் குறைக்கப்படும்.

ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 85 ரூபாயாகவும், டீசல் ஒரு லீற்றரின் பெறுமதி 75 ரூபாயாகவும், மண்ணெண்ணெயின் பெறுமதி லீற்றர் ஒன்று 59 ரூபாயாகவும் குறைக்கப்படும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் மாற்று வரவு- செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதி வரிச்சலுகையைப் பெற்றுக் கொடுக்கவும், உள்ளூர் பால் உற்பத்தி மற் றும் உள்ளூர் கைத்தொழில்களை ஊக்குவிப் பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஐக் கிய தேசியக் கட்சி தனது மாற்று வரவு- செல வுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளது.

நிகர செலவீனம் 261 மில்லியன் ரூபாயா கவும் நிகரசேமிப்பு 283 மில்லியன் ரூபாவா கவும் இருக்கும் எனவும் அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தாம் ஆட்சியில் இருந்தால் இவ்வாறான தொரு வரவு- செலவுத்திட்டத்தையே முன் வைப்போம் என தெரிவித்த ரவி கருணா நாயக்க,

தற்போதைய அரசாங்கத்தால் இவ் வா றான தொரு வரவு-செலவுத்திட்டத்தை முன் வைக்கக் கூடியதாக உள்ளபோதும் அவர்கள் அவ்வாறான வரவு- செலவுத்திட்டத்தை முன் வைக் கமாட்டார்கள் என கூறினார். (ச-5)

## வரவு...

ஆண்டு மறுசீரமைக்கப்பட்ட அமைச்சரவை யிலேயே மாற்றங்கள் மேற்கொள்ளப்பட விருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வரவு-செலவுத் திட்டம் மீதான இறுதி வாக் கெடுப்பு நிறைவடைந்ததன் பின்னரே இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்படவிருப்பதாக வும் அமைச்சரவையில் மாற்றங்களை ஏற் படுத்துகின்றபோது தேசிய பட்டியல் நாடாளு மன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான பசில் ராஜபக்ஷ, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் தலைவரும் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பின ருமான விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகிய இருவருக்கும் அமைச்சுப் பதவிகள் கிடைக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் அவ் வட்டாரங்களிலிருந்து தெரிவிக்கப்படுகின் றது. (ச-5)

## இலங்கைக்...

எதிரான நடவடிக்கைகளுக்கு இந்தியா உள் ளிட்ட பல நாடுகளின் ஆதரவு கிடைத்துள் ளது.

ஜனாதிபதியின் விசேட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ அண்மையில் இந்தியாவுக்கு மேற் கொண்ட விஜயம் குறித்துப் பல்வேறு கேள் விகள் எழுப்பப்பட்டு வருகின்றன.

எனினும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் எந்தவொரு ஒப்பந்தமும் கைச்சாத் திடப்படவில்லை. கிளிநொச்சி மற்றும் முல் லைத்தீவு பிரதேசங்களிலிருந்து இடம்பெயர் ந்து வரும் மக்களுக்குத் தேவையான அத்தி யாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் மருந்து வகைகள் என்பனவற்றை அரசாங் கம் வழங்கி வருகின்றது.

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு வழங்க வென இந்திய அரசாங்கத்தினால் அனுப்பப் படவுள்ள 800 மெற்றிக்தொன் உணவுப் பொருள்களை அரசினூடாக வழங்குவதற் கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச் சர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## மெழுகுதிரி வெளிச்சத்தில்...

களில் அனுப்பி வைக்கப்பட்ட மருந்துப் பொருள்கள் ஓமந்தைச் சோதனைச் சாவடி யிலிருந்து திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள் ளதாக அந்த மாவட்டத்தின் பதில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும் தொற்று நோய்த் தடுப்பு அதிகாரியுமாகிய டாக்டர் ஒஸ் மான் சாள்ஸ் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டப் பொது வைத்திய சாலையுடன் புதுக்குடியிருப்பு, மூங்கிலாறு ஆகிய இடங்களில் 2 பிரதேச வைத்திய சாலைகளும் அத்துடன் மேலும் 5 சிறிய வைத்தியசாலைகளும் பற்றாக்குறைகள், சிர மங்களுக்கு மத்தியிலேயே இயங்கி வருவதா கத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்த மாவட்டத்தில் நிலவுகின்ற எரிபொ ருள் பற்றாக்குறை காரணமாக இந்த வைத் தியசாலையில் உள் நோயாளிகளுக்கான விடுதிகளில் இரவில் சில மணித்தியாலங்கள் மாத்திரமே மின்சார வெளிச்சம் வழங்கப்படு வதாகவும்,

அதன் பின்னர் அரிக்கன் விளக்கு கள் மற்றும் மெழுகுவர்த்தி வெளிச்சத்திலே வைத் திய சேவைகள் இடம்பெறுவதாகவும் டாக்டர் சாள்ஸ் தெரிவிக்கின்றார். (ச-5)

## தமிழர் பிரச்சினையைத் தீர்க்...

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது— அரசு முன்னெடுத்து வரும் யுத்தத்தால் புலி கள் பலவீனமடைந்து வருவதாகக் கூறுவது தென்னிலங்கை மக்களை ஏமாற்றும் முய ற்சி. புலிகள் அண்மைக் காலத்தில் மேலும் பலமடைந்து காணப்படுவதை நாம் நேரடி யாகவே காண முடிகின்றது என அவர் கூறி னார்.

மங்கள சமரவீர ஆரம்பித்திருக்கும் பாது காப்புக் கண்காணிப்பகத்தின் முதலாவது செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கை கள் நாட்டை அழிவுப் பாதைக்கே இட்டுச் சென்று கொண்டிருக்கின்றன. பயங்கரவா தத்தை ஒழிக்கும்போர்வையில் ராஜபக்ஷ அரசு, சிறுபான்மை மக்களுக்கு எதிராகவும் தனது அரசியல் எதிரிகளை அழிப்பதற்குமே முனைப்புக் காட்டி வருகின்றது.

விடுதலைப்புலிகளை சர்வதேசம் தடை செய்ய வேண்டும் என்று வெளிவிவகாரங்க ளுக்கான அமைச்சராக இருந்தபோது கூட சர்வதேச நாடுகளிடம் கேட்கவே செய்தேன். அதன் அர்த்தம் தமிழ் மக்களையோ புலிக ளையோ அழிக்க வேண்டும் என்பதற்காக அல்ல.

விடுதலைப்புலிகளைப் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்து அரசியல் தீர்வொன் றை ஏற்றுக் கொள்ளச் செய்யும் முயற்சிக் காகவே அதனைக் கையாண்டோம்.

ஆனால் இன்றைய மகிந்த அரசு பயங்க ரவாதத்திற்கு எதிரான போர் என்று கூறிக் கொண்டு தமிழினத்தை அழித்தொழிக்கும் ஒரு மோசமான செயலில் ஈடுபட்டு வருகின் றது.

இனப் பிரச்சினை இல்லை என்றும் கூற முடியாது. எமது நாட்டில் நீண்ட காலமாக இன நெருக்கடி காணப்படுகின்றது. இதற்கு அரசியல் ரீதியில் தீர்வு காணப்பட்டேயாக வேண்டும்.

தமிழ், முஸ்லிம் சமூகங்கள் அவர்களது இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என் பதில் உறுதியான நிலைப்பாட்டைக் கொண் டிருக்கின்றனர். நாமும் கூறுவது ஐக்கிய இலங்கைக்குள் சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசி யல் தீர்வொன்றைக் காண வேண்டும்.

சமஷ்டி தீர்வால் நாடு பிளவுபட்டு விடாது. அப்படிக் கூறுபவர்கள்தான் இனவாதிகள் என்று நான் சொல்வேன் என்றார். (எ)

## இந்திய மத்திய அரசாங்கத்...

திகதி கோவை, கோவை மாநகர், நீலகிரி, நாமக் கல், சேலம், கரூர், திண்டுக்கல் ஆகிய இடங் களில் உண்ணா விரதப் போராட்டம் அல்லது பொதுக் கூட்டம் நடைபெறும்.

இதேபோல் 13 ஆம் திகதி திருச்சி, திருச்சி மாநகர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருவா ரூர், நாகை, பெரம்பலூரிலும் 14 ஆம் திகதி கடலூர், விழுப்புரம்,

தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர் கிழக்கு, வேலூர் மேற்கு, திருவண்ணாமலை, புதுச் சேரி ஆகிய இடங்களில் உண்ணாவிரதப் போராட்டம் அல்லது பொதுக் கூட்டம் நடை பெறும்.

15 ஆம் திகதி மதுரை, மதுரை மாநகர், தேனி, இராமநாதபுரம், சிவகங்கை, விருது நகர் ஆகிய இடங்களிலும் 16 ஆம் திகதி திரு நெல்வேலி, திருநெல்வேலி மாநகர், தூத்துக் குடி, கன்னியாகுமரி ஆகிய இடங்களிலும் 17 ஆம் திகதி காஞ்சிபுரம், திருவள்ளூரிலும்,

18 ஆம் திகதி வட சென்னை, தென் சென் னையிலும் உண்ணாவிரதப் போராட்டம் அல்லது பொதுக் கூட்டம் நடைபெறும் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ச-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.11.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.